# தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்,

## பழைய காவல் ஆணையாளர் அலுவலக வளாகம்,

## பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை – 8.

**இணையதள முகவரி: www.tnusrb.tn.gov.in**

**அறிவிக்கை எண் : 02 / 2025.**

**இரண்டாம் நிலைக் காவலர், இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிகளுக்கான பொதுத் தேர்வு - 2025.**

1. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், இரண்டாம் நிலைக் காவலர், இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிகளுக்கான பொதுத் தேர்வு - 2025 க்கு விண்ணப்பதாரர்களிடமிருந்து இணைய வழி விண்ணப்பத்தினை (Online Application) வரவேற்கிறது.

**முக்கிய தேதிகள்**

| | | |
|---|---|---|
| i | அறிவிக்கை தேதி | 21.08.2025 |
| ii | இணைய வழி விண்ணப்பம் துவங்கும் தேதி | 22.08.2025 |
| iii | இணைய வழி விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி | 21.09.2025 |
| iv | இணைய வழியில் சமர்ப்பித்த விண்ணப்பத்தில் திருத்தம் செய்வதற்கான கடைசி தேதி | 25.09.2025 |
| v | எழுத்துத் தேர்வு நடைபெறும் தேதி | 09.11.2025 |

குறிப்பு : விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பத்தை நிரப்பும் முன் இந்த விரிவான அறிவிக்கையில் உள்ள அனைத்து அறிவுரைகளையும் கவனமாக படிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

2. **காலிப்பணியிடங்களின் மொத்த எண்ணிக்கை** : 3,644 + 21*

| துறை | பதவி | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| காவல்துறை | இரண்டாம் நிலைக் காவலர் | ----- | | 2833** |
| சிறை மற்றும் சீர்திருத்தத் துறை | இரண்டாம் நிலை சிறைக் காவலர் | 142 | 38 | 180 |
| தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை | தீயணைப்பாளர் | 631 | - | 631 |

* **பழங்குடியினர் (ST) பற்றாக்குறை காலிப்பணியிடங்கள்**

**காவல்துறைக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் G.O. (Ms) No. 388 Home (Police-IX) Department dated : 04.08.2025 - இல் (**பிற்சேர்க்கை** - XI B) குறிப்பிட்டுள்ளவாறு பணி அமர்வு செய்யப்படுவர்.

குறிப்பு:

i. தேர்வு செய்ய தகுதியான பெண் விண்ணப்பதாரர்கள் இல்லாதபட்சத்தில் தேர்வின் ஒவ்வொரு நிலையிலும் அக்காலிப்பணியிடங்களை அதே வகுப்பினரை சார்ந்த ஆண் விண்ணப்பதாரர்களை கொண்டு நிரப்பப்படும் (காவல் துறைக்கு மட்டும் பொருந்தும்).

ii. பற்றாக்குறை காலிப்பணியிடங்களுக்கு பெண்களுக்கான ஒதுக்கீடு, விளையாட்டு ஒதுக்கீடு, சார்ந்துள்ள வாரிசுதாரர்களுக்கான ஒதுக்கீடு மற்றும் தமிழ் வழியில் பயின்றதற்கான முன்னுரிமை பொருந்தாது.

**3.** பற்றாக்குறை காலிப்பணியிடங்கள் (Shortfall Vacancies) பற்றிய விவரம்

| இரண்டாம் நிலை காவலர் | மொத்தம் |
|---|---|
| பழங்குடியின வகுப்பினர் (ST) | 21 |

**4.** சிறப்பு ஒதுக்கீடு :

| ஒதுக்கீடு | இரண்டாம் நிலை காவலர் | இரண்டாம் நிலை சிறை காவலர் | தீயணைப்பாளர் |
|---|---|---|---|
| சார்ந்துள்ள வாரிசுதாரர்களுக்கானது (Wards-Cum-Dependent) | 10% (9+1) | 10% (9+1) | 10% (9+1) |
| விளையாட்டு வீரர்களுக்கானது (Sports Person) | 7% | 10% | 10% |
| மெச்சத்தக்க விளையாட்டு வீரர்களுக்கானது (Meritorious Sports Person) | 3%* | - | - |
| முன்னாள் இராணுவத்தினர்களுக்கானது (Ex-Servicemen) | 5% | 5% | 5% |
| ஆதரவற்ற விதவைகளுக்கானது (Destitute Widow) | 3% | 3% | - |
| தமிழ் வழியில் பயின்றவர்களுக்கான முன்னுரிமை (PSTM) | 20% | 20% | 20% |

<u>குறிப்பு</u> :

* G.O.(Ms). No.116 of Home (Police.3) Department Dated:07.03.2025 -ன் படி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் (SDAT) நிரப்பப்படும். **பிற்சேர்க்கை** - XI -ன்படி.

சிறப்பு ஒதுக்கீட்டின் கீழ் தேர்வு செய்திட தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் இல்லாவிடில், அந்த காலிப்பணியிடங்கள், அந்தந்த துறையின் பொது ஒதுக்கீட்டிற்கு மாற்றம் செய்யப்பட்டு அதே வகுப்பினரைச் சார்ந்த தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

**5.** ஊதிய விகிதம்: ரூ.18,200 - 67,100.

**6.** கல்வித் தகுதி:

குறைந்தபட்சம் 10-ம் வகுப்பு அல்லது அதற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**7.** விண்ணப்பதாரர்களுக்கான வயது தகுதிகள்:

| | | |
|---|---|---|
| i. | பொதுப் பிரிவினர் (OC) | 01.07.2025 அன்று 18 வயது நிறைவுற்றவராகவும், 26 வயது நிறைவு பெறாதவராகவும் இருக்க வேண்டும். (02.07.1999-லிருந்து 01.07.2007-க்குள் பிறந்திருக்க வேண்டும்). |
| ii. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC) / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) (BC(M)) / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் (MBC / DNC) | 01.07.2025 அன்று 18 வயது நிறைவுற்றவராகவும், 28 வயது நிறைவு பெறாதவராகவும் இருக்க வேண்டும். (02.07.1997-லிருந்து 01.07.2007-க்குள் பிறந்திருக்க வேண்டும்) |
| iii. | ஆதிதிராவிடர் (SC) / ஆதிதிராவிடர் (அருந்ததியர்) (SC (A)) பழங்குடியினர் (ST) | 01.07.2025 அன்று 18 வயது நிறைவுற்றவராகவும், 31 வயது நிறைவு பெறாதவராகவும் இருக்க வேண்டும். (02.07.1994-லிருந்து 01.07.2007-க்குள் பிறந்திருக்க வேண்டும்). |
| iv. | மூன்றாம் பாலினத்தவர் | 01.07.2025 அன்று 18 வயது நிறைவுற்றவராகவும், 31 வயது நிறைவு பெறாதவராகவும் இருக்க வேண்டும். (02.07.1994-லிருந்து 01.07.2007-க்குள் பிறந்திருக்க வேண்டும்). |
| v. | ஆதரவற்ற விதவை | 01.07.2025 அன்று 18 வயது நிறைவுற்றவராகவும், 37 வயது நிறைவு பெறாதவராகவும் இருக்க வேண்டும். (02.07.1988-லிருந்து 01.07.2007-க்குள் பிறந்திருக்க வேண்டும்). |
| vi. | முன்னாள் இராணுவத்தினர்* / இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்குப் பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வு பெறவுள்ள இராணுவத்தினர் / முன்னாள் மத்திய ஆயுத காவல் படையினர்** | 01.07.2025 அன்று 47 வயது நிறைவு பெறாதவராகவும் இருக்க வேண்டும். (02.07.1978-லிருந்து 01.07.2007-க்குள் பிறந்திருக்க வேண்டும்). |

* இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் அல்லது மேற்கூறிய படைபிரிவிலிருந்து ஓராண்டு காலத்திற்குள் பணி ஓய்வு பெற உள்ளவர்கள் முன்னாள் இராணுவத்தினராக கருதப்படுவர்.

** முன்னாள் மத்திய ஆயுத காவல் படையினர் – கீழ்காணும் ஏதாவது ஒரு படைப் பிரிவிலிருந்து பணி ஓய்வு பெற்றவர்கள் :

(i) அசாம் ரைபிள்ஸ் (Assam Rifles)

(ii) எல்லை பாதுகாப்புப் படை (Border Security Force)

(iii) மத்திய தொழிற்சாலை பாதுகாப்புப் படை (Central Industrial Security Force)

(iv) மத்திய சேமக் காவல் படை (Central Reserve Police Force)

(v) இந்திய திபெத் எல்லைக் காவல் (Indo-Tibetan Border Police)

(vi) தேசிய பாதுகாப்புப் படை (National Security Guard)

(vii) சசாஸ்திர சீமா பால் (Shasatra Seema Bal)

**8.** வகுப்புவாரி இட ஒதுக்கீடு:

(i) ஏற்கனவே உள்ள விதிகள் மற்றும் அரசு உத்தரவுகளின்படி வகுப்புவாரி இடஒதுக்கீட்டு விகிதம்* (மெச்சத்தக்க விளையாட்டு வீரர்களுக்கான 3% ஒதுக்கீட்டை தவிர) குறித்த விவரங்கள் கீழ்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| பொதுப் பிரிவினர் - OC | 31% |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் - BC | 26.5% |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) - BCM | 3.5% |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் – MBC / DNC | 20% |
| ஆதிதிராவிட வகுப்பினர் - SC | 15% |
| ஆதிதிராவிட (அருந்ததியர்) வகுப்பினர் – SC(A) | 3% |
| பழங்குடியின வகுப்பினர் - ST | 1% |

***குறிப்பு :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 இன் அட்டவணை - V இல் குறிப்பிடப்பட்டுள்ள 200 புள்ளிகள் பட்டியலின்படி ஒவ்வொரு பிரிவிற்குமான பதவிகள் ஒதுக்கப்படும்.

ii) தமிழ்நாடு அரசின் தகுதி வாய்ந்த அதிகாரிகளால் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழைப் பெற்றிருப்பவர்கள் மட்டுமே வகுப்புவாரி இடஒதுக்கீட்டிற்கு பரிசீலிக்கப்படுவார்கள்.

iii) தேர்வின் ஒவ்வொரு நிலையிலும், ஆதிதிராவிடர் (அருந்ததியர்) வகுப்பினருக்கான இடங்கள் முன்னுரிமை அடிப்படையில் நிரப்பப்பட்ட பின்னர், தகுதி பெற்ற ஆதிதிராவிடர் (அருந்ததியர்) விண்ணப்பதாரர்கள் மிகுதியாக இருந்தால் அவர்கள் ஆதிதிராவிட வகுப்பினருக்கான இடஒதுக்கீ;ட்டின் கீழும் தேர்வு செய்யப்படுவார்கள். ஆதிதிராவிட (அருந்ததியர்) இடஒதுக்கீட்டின் கீழ் நிரப்பப்பட தகுதியான விண்ணப்பதாரர்கள் இல்லாதபட்சத்தில் அந்த காலிப்பணியிடங்கள் தகுதியான ஆதிதிராவிட விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

iv) G.O.(Ms) No.38, Adi Dravidar and Tribal Welfare (CV-1) Department, Dt: 17.03.2023 - இன் படி, "நரிக்குறவன், குருவிக்காரன்" துணை வகுப்பு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு பழங்குடியின வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

வகுப்புவாரி பிரிவுகள் மற்றும் உட்பிரிவுகள் பட்டியல் I & II ஆகியவை **பிற்சேர்க்கை - I** -ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**9. சார்ந்துள்ள வாரிசுக்கான 10% இட ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிப்பவர்களுக்கான தகுதிகள்:**

(i) பணியிலுள்ள / ஓய்வு பெற்ற / மரணமடைந்த / மருத்துவரீதியான இயலாமையினால் பணி ஓய்வு பெற்ற அந்தந்த துறையில் உள்ள களப்பணியாளர்கள் / அமைச்சுப் பணியாளர்களின் சார்ந்துள்ள வாரிசாக இருக்க வேண்டும்.

(ii) பணி நீக்கம் (Removed from service) / பணியறவு (Dismissed from service) செய்யப்பட்டவர்களுடைய வாரிசுதாரர்கள் இந்த சிறப்பு ஒதுக்கீட்டை பெற இயலாது.

(iii) மகன், சட்டரீதியாக தத்தெடுக்கப்பட்ட மகன், திருமணமாகாத மகள் மற்றும் சட்டரீதியாக தத்தெடுக்கப்பட்ட திருமணமாகாத மகள் ஆகியோர் சார்ந்துள்ள வாரிசுதாரர்களுக்கான இட ஒதுக்கீட்டை பெற தகுதியானவர்கள்.

(iv) திருமணமான பெண் விண்ணப்பதாரர்கள் சார்ந்துள்ள வாரிசுக்கான இட ஒதுக்கீட்டை பெற இயலாது.

(v) சார்ந்துள்ள வாரிசுக்கான சான்றிதழ், **பிற்சேர்க்கை II & II (A)-ல்** கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின்படி, காவல் துணை ஆணையர், காவல் கண்காணிப்பாளர், தளவாய் / மாவட்ட அதிகாரி, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை / சிறை கண்காணிப்பாளர், சிறைகள் மற்றும் சீர்திருத்த பணிகள் துறை, பதவி நிலைக்கு குறையாத அதிகாரியிடத்தில் பெற வேண்டும்.

(vi) சார்ந்துள்ள வாரிசுக்கான சான்றிதழ், இத்தேர்விற்கான அறிவிக்கைத் தேதிக்குப் பின்னர் மற்றும் இணையவழி விண்ணப்பம் சமர்பிப்பதற்கான கடைசி தேதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பெற்றிருக்க வேண்டும்.

(vii) விண்ணப்பதாரர், சார்ந்துள்ள வாரிசுக்கான சான்றிதழை முறையான படிவத்தில் பெறவில்லையெனில் அவர் பொது விண்ணப்பதாரராகக் கருதப்படுவார்.

(viii) களப்பணியாளர்கள் / அமைச்சுப் பணியாளர்களின் சார்ந்துள்ள வாரிசுக்கான ஒதுக்கீட்டிற்கு ஒரு அறிவிக்கைக்கு ஒரே ஒரு வாரிசுதாரர் மட்டுமே விண்ணப்பிக்க இயலும்.

(ix) விண்ணப்பதாரர் ஏற்கனவே மத்திய அரசு / மாநில அரசு / பொதுத்துறை நிறுவன பணியிலிருந்தால் சார்ந்துள்ள வாரிசுதாரர்களுக்கான ஒதுக்கீட்டை பெற தகுதியற்றவர் ஆவர்.

(x) சார்ந்துள்ள வாரிசுக்கான ஒதுக்கீட்டில் தேர்வு செய்திட தகுதியான விண்ணப்பதாரர்கள் இல்லாதபட்சத்தில், அக்காலிப்பணியிடங்கள், அந்தந்த பொது பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட்டு அதே வகுப்பினரைச் சார்ந்த தகுதியான விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

(xi) நடைமுறையில் உள்ள விதிகளின்படி வகுப்புவாரி இடஒதுக்கீடு, தமிழ்வழியில் பயின்றமைக்கான முன்னுரிமை ஆகியவை சார்ந்துள்ள வாரிசுதாரருக்கான ஒதுக்கீட்டிற்கும் பின்பற்றப்படும்.

(xii) ஒரு கள / அமைச்சு பணியாளர் ஏற்கனவே அவர்களது வாரிசுகளில் ஒருவருக்கு இவ்வொதுக்கீட்டின் கீழ் ஏதேனும் ஒரு பதவி பெற்றிருந்தால் மீண்டும் வேறொரு வாரிசுக்கு இவ்வொதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்க கூடாது.

(xiii) சார்ந்துள்ள வாரிசுதாரர்களுக்கான இடஒதுக்கீடு அவர்களது பெற்றோர் பணிபுரியும் / பணிபுரிந்த துறையில் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படும்.

**10. விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்** :

**காவல்துறை இரண்டாம் நிலை காவலர்** (7%), **இரண்டாம் நிலை சிறை காவலர்** (10%) **மற்றும் தீயணைப்பாளர் (10%) பதவிகளுக்கான தகுதிகள்** :

(i) விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிப்பவர்கள் பொது விண்ணப்பதாரர்களைப் போலவே அனைத்துத் தகுதிகளும் பெற்றிருக்க வேண்டும். கூடுதலாக, கீழே குறிப்பிட்டுள்ள 16 அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் ஏதேனும் ஒன்றில் படிவம் - I / படிவம் - II / படிவம் – III - ஐ அறிவிக்கை தேதிக்கு முன்னர் 5 ஆண்டுகளுக்குள் பெற்றிருக்க வேண்டும்.

(ii) விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கத் தேவையான சான்றிதழ்களின் விவரங்கள்:

| படிவத்தின் பெயர் | பங்குபெற்ற நிலையின் விவரம் | சான்றிதழ் வழங்கும் அலுவலர் |
|---|---|---|
| படிவம் - I | இந்திய நாட்டின் சார்பாக பன்னாட்டு போட்டிகளில் கலந்து கொண்டவர். | சம்பந்தப்பட்ட விளையாட்டின் தேசிய விளையாட்டு கூட்டமைப்பின் செயலாளர் |
| படிவம் - II | தேசிய அளவிலான போட்டிகளில் தமிழ்நாட்டின் சார்பாக கலந்து கொண்டவர் | சம்பந்தப்பட்ட விளையாட்டின் தேசிய விளையாட்டு கூட்டமைப்பின் செயலாளர் அல்லது மாநில விளையாட்டு சங்கத்தின் செயலாளர் |
| படிவம் - III | பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில் தமிழக பல்கலைக்கழகம் சார்பாக கலந்து கொண்டவர். | இயக்குநர் அல்லது பதிவாளர் அல்லது பல்கலைக் கழகத்தின் விளையாட்டு பொறுப்பு அதிகாரி |

(iii) <u>அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுகள்:-</u> 1.கூடைப்பந்து 2. கால்பந்து 3. வளைகோல் பந்து 4. கையுந்துப்பந்து 5. கைப்பந்து 6. கபடி 7. மல்யுத்தம் 8. குத்துச் சண்டை 9. ஜிம்னாஸ்டிக்ஸ் 10. ஜூடோ 11. பளு தூக்குதல் 12. நீச்சல் போட்டி 13. தடகளப் போட்டிகள் 14. குதிரையேற்றம் 15. துப்பாக்கி சுடுதல் மற்றும் 16. சிலம்பம்*.

*SDAT ஆல் அங்கீகரிக்கப்படும் விளையாட்டு சங்கத்தால் வழங்கப்படும் படிவம் - I / படிவம் - II க்கு மட்டுமே பொருந்தும்.

(iv) விண்ணப்பதாரர்கள் இந்திய நாட்டின் / தமிழ்நாடு மாநிலத்தின் சார்பாக கலந்து கொண்டு இந்திய ஒலிம்பிக் சங்கம் அல்லது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அல்லது தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களிலிருந்து படிவம் - I அல்லது படிவம் - II ஐ பெற்றிருக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு சங்கங்களின் பட்டியல் பிற்சேர்க்கை - **VIII** -ல்

கொடுக்கப்பட்டுள்ளது. பிற விளையாட்டு சங்கங்களிலிருந்து பெறப்படும் படிவம் - I / படிவம் - II சான்றிதழ்கள் விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(v) விண்ணப்பதாரர்கள் தமிழ்நாடு பல்கலைக்கழகங்களின் சார்பாக விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டமைக்கான படிவம் III-ஐ பல்கலைக்கழகத்தின் இயக்குநர் அல்லது அதற்கு இணையான விளையாட்டு பொறுப்பு அதிகாரியிடமிருந்து பெற்றிருக்க வேண்டும்.

(vi) விளையாட்டு ஒதுக்கீட்டின்கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் பொது விண்ணப்பதாரர்களை போல் எழுத்துத் தேர்வு பகுதி-I மற்றும் பகுதி-II, சான்றிதழ் சரிபார்த்தல், உடற்கூறு அளத்தல், உடல் உறுதி தேர்வு, உடல்திறன் போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டும்.

(vii) விளையாட்டுக்கான ஒதுக்கீட்டின் கீழ் நிரப்ப தகுதியான விண்ணப்பதாரர்கள் இல்லாதபட்சத்தில், அந்த காலிப்பணியிடங்கள் பொது ஒதுக்கீட்டில் அந்தந்த துறைகளில் அதே வகுப்பைச் சார்ந்த தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

(viii) விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்குள் தற்போது நடைமுறையிலுள்ள விதிகளின்படி வகுப்புவாரி ஒதுக்கீடு மற்றும் தமிழ்வழியில் பயின்றமைக்கான முன்னுரிமை பின்பற்றப்படும்.

(ix) விளையாட்டுப் படிவம் - I / படிவம் - II / படிவம் - III-ல் பங்குபெற்றவரின் பெயர், விளையாட்டின் பெயர், விளையாட்டு நடைபெற்ற தேதி மற்றும் சான்றிதழ் வழங்கும் அலுவலரின் பெயர் மற்றும் முத்திரை கட்டாயம் இடம் பெற்றிருக்க வேண்டும், இல்லையெனில் அவர்கள் பொது விண்ணப்பதாரர்களாக கருதப்படுவார்கள்.

**11. மெச்சத்தக்க விளையாட்டு வீரர்களுக்கான 3% (இரண்டாம் நிலை காவலர் பதவிகளுக்கு மட்டும்) ஒதுக்கீட்டிற்கான தகுதிகள்:**

**G.O.(Ms). No.116, Home (Police.3) Department** தேதி: 07.03.2025. -ன்படி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் (SDAT) மூலம் 3% இடஒதுக்கீட்டின் கீழ் மெச்சத்தக்க விளையாட்டு வீரர்களை நியமிப்பது தொடர்பான வழிகாட்டுதல்கள் மற்றும் முறைகள்.

i. அதிகபட்ச வயது வரம்பு - 35 வயது

ii. கல்வித்தகுதி – தற்போதைய விதிமுறைகளின்படி பொது விண்ணப்பதாரர்களுக்கான கல்வித் தகுதியே இவ்வொதுக்கீட்டிற்கும் பொருந்தும்.

iii. விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் பரிசீலிக்க தகுதியான விளையாட்டுகள் - G.O.(Ms). எண். 6, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு (S1) துறையின், தேதி 20.02.2019-ல் குறிப்பிடப்பட்டுள்ள விளையாட்டுகள் மேலும் தற்போது நடைமுறையில் உள்ள திருத்தியமைக்கப்பட்ட விதிமுறைகள் பின்பற்றப்படும்.

iv. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அரசாணைகள் **பிற்சேர்க்கை -XI** -ல் கொடுக்கப்பட்டுள்ளது.

v. உடற்கூறு அளத்தல், உடல் உறுதி தேர்வு மற்றும் உடல்திறன் போட்டிகள் தற்போதைய விதிமுறைகளின்படி பொது விண்ணப்பதாரர்களைப் போலவே நடத்தப்படும்.

vi. மெச்சத்தக்க விளையாட்டு வீரர்களுக்கு எழுத்துத் தேர்விலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

vii. வகுப்புவாரி சுழற்சி முறையைப் பின்பற்றாமல், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் வழங்கப்படும் மதிப்பெண்களின் அடிப்படையில் மட்டுமே பணி ஒதுக்கீடு செய்யப்படும்.

viii. மருத்துவ பரிசோதனை, முந்தைய குற்ற நடவடிக்கைகள் மற்றும் குண நலன்கள் குறித்த விசாரணை தற்போது உள்ள விதிமுறைகளின்படி பொது விண்ணப்பதாரர்களைப் போலவே நடத்தப்படும்.

ix. 3% மெச்சத்தக்க விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீட்டிற்கு போதுமான எண்ணிக்கையிலான தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் இல்லாதபட்சத்தில், அக்காலிப்பணியிடங்களை 7% விளையாட்டு ஒதுக்கீட்டோடு சேர்த்து வழக்கமான தேர்வு நடைமுறைகளைப் பின்பற்றி நிரப்பப்படும். அதன்பிறகும் காலிப்பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பதாரர்கள் இல்லாதபட்சத்தில், G.O.(Ms).No.960, உள்துறை (காவல்துறை-3), தேதி 18.12.2014 -ன் படி தகுதி வாய்ந்த அதே வகுப்பினரை சார்ந்த பொது விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

x. மெச்சத்தக்க விளையாட்டு வீரர்களுக்கான இணையவழி விண்ணப்பம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் அதிகாரப்பூர்வ இணையதள பக்கம் **https://sdat.tn.gov.in/. -ல்** உள்ளது. மேலும் இது சம்பந்தமான இணையதள பக்கத்தின் திரையின் படம் (Screenshot) **பிற்சேர்க்கை - XII -ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

xi. மெச்சத்தக்க விளையாட்டு வீரர்களுக்கான இணையவழி விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

xii. மேலும் விவரங்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணையதளத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

**12. தமிழ் மொழியை பயிற்று மொழியாகக் கொண்டு பயின்றவர்களுக்கான 20% முன்னுரிமை (PSTM):**

i. மொத்த காலிப் பணியிடங்களில், **20%** பணியிடங்கள், பள்ளியில் முதலாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை தமிழ் மொழியை பயிற்று மொழியாகக் கொண்டு, பயின்று தேர்ச்சி பெற்றிருப்போருக்கு இத்தேர்வின் ஒவ்வொரு

நிலையிலும் **20%** முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பதாரர் முதலாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை தமிழ் பயிற்று மொழியில் படித்துள்ளார் என்பதற்கான சான்றிதழைப் பெற்று இணையவழி விண்ணப்பத்துடன் பதிவேற்றம் செய்யப்படவேண்டும். (மாதிரி படிவம் **பிற்சேர்க்கை** - III).

ii. '**தமிழ் வழியில் படித்தவர்**' என்பது, அரசின் கீழ் உள்ள சேவைகளில் எந்தவொரு நியமனத்திற்கும் பொருந்தக்கூடிய விதிகள் அல்லது ஒழுங்குமுறைகள் அல்லது உத்தரவுகளில் நேரடி ஆட்சேர்ப்புக்கு பரிந்துரைக்கப்பட்ட கல்வித் தகுதி வரை தமிழ் வழியில் பயின்றவர் என்று பொருள்படும்.

iii. **'தமிழ் வழியில் படித்தவர்'** என்பதற்கான ஆதாரமாக, முதல்வர் / தலைமை ஆசிரியர் / மாவட்டக் கல்வி அலுவலர் / முதன்மைக் கல்வி அலுவலர் / மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் ஆகியோரில் பொருத்தமானவர்களிடத்திலிருந்து இணைப்பில் உள்ள படிவம் - III -ல் குறிப்பிட்டுள்ளபடி 1-ஆம் வகுப்பு முதல்10-ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயின்றதற்கான சான்றிதழை பெற்றிருக்க வேண்டும்.

iv. நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி வரையிலான அனைத்துக் கல்வி வகுப்புகளுக்கும் '**தமிழ் வழியில் படித்தவர்**' என்பதற்கான ஆதாரமாக அத்தகைய ஆவணங்களை பதிவேற்றம் செய்யத் தவறினால், தமிழ் வழியில் பயின்றவர்களுக்கான முன்னுரிமை வழங்க இயலாது.

v. G.O.(Ms).No.16, மனிதவள மேலாண்மை (எஸ்) துறை, தேதி 15.04.2025 -ன் படி, பள்ளிக்கு செல்லாமல் நேரடியாக தனித்தேர்வர்களாக தமிழ் வழியில் தேர்வெழுதி தேர்ச்சி பெற்றவர்கள் மேற்படி முன்னுரிமை வழங்கப்படத் தகுதியுடையவர்கள் அல்லர். (அரசாணை **பிற்சேர்க்கை -XI (A)** -ல் கொடுக்கப்பட்டுள்ளது.)

vi. G.O.(Ms).No.16, மனிதவள மேலாண்மை (எஸ்) துறை, தேதி 15.04.2025 –ல் கொடுக்கப்பட்டுள்ள தெளிவுரைகள் இத்தேர்வு நடைமுறைக்கு பின்பற்றப்படும்.

vii. மத்திய, மாநில அரசு பணியிலோ அல்லது பொது துறை நிறுவனங்களிலோ பணியாற்றி வரும் விண்ணப்பதாரர்களுக்கு தமிழ் வழியில் பயின்றதற்கான (PSTM) முன்னுரிமை சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண். WA. 123481/2025 - இன் தீர்ப்பு மற்றும் PSTM முன்னுரிமை குறித்து எழுத்து தேர்வுக்கு முன்னர் வழங்கப்படும் அரசாணை மற்றும் தெளிவுரைக்கு உட்பட்டதாகும். இல்லையெனில் தற்போது நடைமுறையில் உள்ள வழிமுறைகள் பின்பற்றப்படும்.

viii. மத்திய / மாநில அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர்களுக்கான தடையில்லா சான்றிதழின் மாதிரி படிவம் **பிற்சேர்க்கை** - VII -ல் கொடுக்கப்பட்டுள்ளது.

13. சிறப்பு ஒதுக்கீடுகள்

## அ. 5% முன்னாள் இராணுவத்தினருக்கான ஒதுக்கீடு

| | |
|---|---|
| i | முன்னாள் இராணுவத்தினர் / இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்குள் ஓய்வு பெறவுள்ள இராணுவ வீரர்கள் இவ்வொதுக்கீட்டின் விண்ணப்பிக்கலாம். |
| ii | பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு, அறிவிக்கை தேதி அன்று மூன்றாண்டுகள் நிறைவு செய்யாத முன்னாள் இராணுவத்தினர் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். |
| iii | பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட சான்றிதழைப் பதிவேற்றம் செய்ய வேண்டும். விடுவிக்கப்பட்ட சான்றிதழில் பெயர் மற்றும் விடுவிக்கப்பட்ட தேதி குறிப்பிடாமல் பதிவேற்றம் செய்தால் அவர்கள் இவ்வொதுக்கீட்டின் கீழ் பரிசீலிக்கப்படமாட்டார்கள். |
| iv | முன்னாள் இராணுவத்தினர் தங்களுடைய விடுவிப்புச் சான்றிதழை பதிவேற்றம் செய்யத் தவறினால் அவர்கள் இவ்வொதுக்கீட்டின் கீழ் பரிசீலிக்கப்படமாட்டார்கள். |
| v | முன்னாள் இராணுவ வீரர்கள் இராணுவப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு ஏதேனும் அரசுப் பணியில் பணியமர்த்தப்பட்டிருந்தால், இத்தேர்வில், அவர்கள் முன்னாள் இராணுவத்தினர் என்பதற்கான சலுகையினைக் கோர இயலாது. |
| vi | இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசித் தேதிக்குப் பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வு பெறவுள்ள இராணுவ வீரர்கள் தங்களது படை பிரிவு அலுவலரிடத்தில் (Commanding Officer) உரிய படிவத்தில் விடுவிக்கப்படும் தேதி குறிப்பிட்டு பெற்ற சான்றிதழை இணையவழி விண்ணப்பத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். இல்லையேல் அவர்கள் இவ்வொதுக்கீட்டின் கீழ் பரிசீலிக்கப்படமாட்டார்கள். (மாதிரி படிவம் **பிற்சேர்க்கை - IV**). |
| vii | முன்னாள் இராணுவத்தினர் ஒதுக்கீட்டிற்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் இல்லாதபட்சத்தில், அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள அக்காலிப்பணியிடங்கள் நடைமுறையில் உள்ள விதிகளின்படி, அதே வகுப்பைச் சார்ந்த அந்தந்த துறைகளில் தகுதிவாய்ந்த பொது விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும். |
| viii | பெண் முன்னாள் இராணுவத்தினர் ஆண் முன்னாள் இராணுவத்தினரை போன்றே கருதப்படுவார்கள். |
| ix | முன்னாள் மத்திய ஆயுத காவல்படையினருக்கு (EX - CAPF) இந்த சிறப்பு ஒதுக்கீடு பொருந்தாது. |

## ஆ. 3% ஆதரவற்ற விதவைகளுக்கான (Destitute Widows) ஒதுக்கீடு

(i) இரண்டாம் நிலை காவலர், இரண்டாம் நிலை சிறைக் காவலர் காலிப்பணியிடங்களில், 3% ஆதரவற்ற விதவைகளுக்கு ஒதுக்கப்படும்.

(ii) **'ஆதரவற்ற விதவைக்கான சான்றிதழ்'** வருவாய் கோட்ட அலுவலர் (RDO) / சார் ஆட்சியர் (Sub-Collector) / உதவி ஆட்சியர் (Assistant Collector) அவர்களிடமிருந்து பெற்று இணையவழி விண்ணப்பத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். இவ்விதம் இச்சான்றிதழை பதிவேற்றம் செய்யாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பம் ஆதரவற்ற விதவைக்கான பிரிவின் கீழ் பரிசீலிக்கப்படமாட்டாது. பிற

அலுவலர்களான வட்டாட்சியர் மற்றும் மண்டல வட்டாட்சியரிடமிருந்து பெற்றிருந்தால் அச்சான்றிதழ் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. (மாதிரி படிவம் **பிற்சேர்க்கை** - V).

(iii) விதவை சான்றிதழ் அல்லது விவாகரத்து சான்றிதழை பதிவேற்றம் செய்தவர்கள் ஆதரவற்ற விதவைக்கான ஒதுக்கீட்டின் கீழ் பரிசீலிக்கப்படமாட்டார்கள்.

(iv) ஆதரவற்ற விதவைக்கான சலுகை கோரும் விண்ணப்பதாரரின் கணவர் அறிவிக்கை தேதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ இயற்கை எய்திருக்க வேண்டும்.

(v) ஆதரவற்ற விதவைக்கான சான்றிதழில் ஏதேனும் திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருப்பின் கண்டிப்பாக வழங்கிய அதிகாரியால் சான்றளிக்கப்பட்டோ அல்லது அதற்கு பதிலாக புதிய சான்றிதழை பெற்றோ பதிவேற்றம் செய்ய வேண்டும்.

(vi) ஆதரவற்ற விதவைக்கான ஒதுக்கீட்டிற்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் இல்லாதபட்சத்தில், அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள அக்காலிப்பணியிடங்கள் நடைமுறையில் உள்ள விதிகளின்படி, அதே வகுப்பைச் சார்ந்த அந்தந்த துறைகளில் தகுதி வாய்ந்த பொது பெண் விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

**14. திருநங்கைகள் (Transgender):**

i. திருநங்கைகள், தேர்வு நடைமுறைகளுக்கான பாலினமாக ஆண் அல்லது பெண் என ஏதேனும் ஒன்றினை தேர்வு செய்து கொள்ளலாம். திருநங்கைகள் தங்களது விண்ணப்பத்துடன், தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத்திலிருந்து / மாவட்ட ஆட்சியரிடம் இருந்து பெறப்பட்ட அடையாள அட்டையினை பதிவேற்றம் செய்ய வேண்டும். (மாதிரி அடையாள அட்டை **பிற்சேர்க்கை - VI**).

ii. தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியம் / மாவட்ட ஆட்சியர் தவிர்த்து வேறு எந்த அதிகாரியாலும் வழங்கப்பட்ட திருநங்கை அடையாள அட்டையை பதிவேற்றினால் உரிய செயல்முறைக்குப் பிறகு விண்ணப்பதாரரால் பதிவேற்றம் செய்யப்பட்ட வகுப்பு அல்லது பொது பிரிவுக்கு மாற்றம் செய்யப்படுவார்கள்.

iii. திருநங்கைகள், ஆண் என தேர்வு செய்தால் ஆண் விண்ணப்பதாரர்களுடன் சான்றிதழ் சரிபார்த்தல், உடற்கூறு அளத்தல், உடல் உறுதி தேர்வு மற்றும் உடல்திறன் போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டும். பெண் பாலினத்தை தேர்வு செய்தால் பெண் விண்ணப்பதாரர்களுடன் சான்றிதழ் சரிபார்த்தல், உடற்கூறு அளத்தல், உடல் உறுதி தேர்வு மற்றும் உடல்திறன் போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டும். ஒருமுறை ஆண் அல்லது பெண் பாலினத்தை தேர்வு செய்தால், பின்னர் பாலின மாற்றம் செய்ய இயலாது.

iv. திருநங்கை விண்ணப்பதாரர்கள், பெண் பாலினத்தை தேர்வு செய்தால் பொது ஒதுக்கீடு மற்றும் பெண் விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடஒதுக்கீட்டிலும், ஆண் பாலினத்தை தேர்வு செய்தால் பொது ஒதுக்கீட்டில் மட்டுமே பரிசீலிக்க தகுதியுடையவர் ஆவர்.

v. திருநங்கைகளுக்கான வயது தளர்வு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கப்படும் வயது தளர்வை போன்று வழங்கப்படும்.

vi. திருநங்கைகள், தங்களது சாதிச் சான்றிதழை சமர்ப்பிக்காவிடில் அவர்கள் வயது தளர்வு தவிர பிற நிகழ்வுகளில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக (MBC) கருதப்படுவார்கள்.

vii. ஆதிதிராவிடர் / ஆதிதிராவிடர் (அருந்ததியர்) / பழங்குடியினர் வகுப்பை சார்ந்த திருநங்கைகள் மற்றும் தனது சாதிக்குரிய சாதிச் சான்றிதழை வைத்திருப்பவர்கள் அந்தந்த வகுப்பினராக கருதப்படுவார்கள்.

viii. இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது ஆதிதிராவிடர் / ஆதிதிராவிடர் (அருந்ததியர்) / பழங்குடியினர் தவிர மற்ற வகுப்பை சார்ந்த திருநங்கைகள் தாங்கள் வைத்திருக்கும் சான்றிதழின்படி அவர்கள் சார்ந்த வகுப்பு அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு இவற்றில் எது சாதகமானதோ அதனை பதிவேற்றம் செய்து கொள்ளலாம்.

ix. திருநங்கைகள் ஒரு குறிப்பிட்ட வகுப்பை தேர்வு செய்த பின், அது இறுதியாக கருதப்படும் பின்னர் மாற்றம் செய்ய இயலாது.

x. சாதி சான்றிதழ் இல்லாத திருநங்கை விண்ணப்பதாரர்கள் 'மிகவும் பிற்படுத்தப்பட்ட' வகுப்பினர் என்பதன் கீழ் பரிசீலிக்கத் தேர்வு செய்தவர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) / சீர்மரபினர் என சாதி சான்றிதழ் பெற்றிருந்தும் 'மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்' என பரிசீலிக்க தேர்வு செய்தவர்கள் அவர்களின் உரிமைகோருவதற்கு ஆதரவாக சாதி சான்றிதழை பதிவேற்றம் செய்ய வேண்டியதில்லை.

xi. மூன்றாம் பாலினத்தவர் இரண்டாம் நிலை காவலர் பதவிக்கு மட்டுமே விண்ணப்பிக்கலாம். மேலும் மூன்றாம் பாலின விண்ணப்பதாரர்கள் இரண்டாம் நிலை சிறை காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிக்கு விண்ணப்பிக்க இயலாது. (G.O.(Ms).No.580 Home (Prison-II) Department, Dated. 11.08.2016 & G.O.(Ms).No.585 Home (Police-XVII) Department, Dated. 12.08.2016).

## 15. பதவி விருப்ப முன்னுரிமை (Post Preference):

அ. i) பெண் விண்ணப்பதாரர்கள் இரண்டாம்நிலை காவலர் (Gr-II PC) மற்றும் இரண்டாம் நிலை சிறை காவலர் (Gr-II JAIL WARDER) பதவிகளுக்கு மட்டுமே முன்னுரிமை அளிக்க இயலும். தீயணைப்பாளர் (FIREMAN) பதவிகள் பெண்களுக்கு ஒதுக்கப்படவில்லை.

ii) ஆண் விண்ணப்பதாரர்கள் இரண்டாம் நிலை காவலர், இரண்டாம் நிலை சிறை காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிகளுக்கு முன்னுரிமை அளிக்கலாம்.

iii) மூன்றாம் பாலினத்தவர் இரண்டாம் நிலை காவலர் பதவிக்கு மட்டுமே

முன்னுரிமை அளிக்கலாம். மேலும் மூன்றாம் பாலின விண்ணப்பதாரர்களுக்கு இரண்டாம் நிலை சிறை காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிகள் ஒதுக்கப்படவில்லை. G.O. (MS). No.580 Home (PRISON-II) Department. Dated : 11.08.2016. and G.O. (MS). No.585 Home (POLICE - XVII) Department, Dated : 12.08.2016.

ஆ. i) விண்ணப்பதாரர்கள், இணையவழி விண்ணப்பத்தில், தனிநபர் விவரங்கள் பிரிவில் (Personal Details) பதவி முன்னுரிமையில், அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட பதவிகளில் ஒரு பதவியையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளையோ தேர்வு செய்யலாம். அவ்வாறு ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளை தேர்வு செய்யும் பொழுது, தனது விண்ணப்பத்தில், தான் தேர்வு செய்யப்பட விரும்பும் பதவிகளை முன்னுரிமை வரிசைப்படி தேர்வு செய்ய வேண்டும்.

ii) இறுதி தற்காலிகத் தேர்வு பட்டியல் தயாரிக்கும் போது, ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்குத் தேர்வு செய்யப்படத் தகுதி வாய்ந்தவராக இருந்தால், அவரது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பதவி முன்னுரிமை வரிசையைக் கருத்தில் கொண்டு தேர்வு செய்யப்படுவர்.

iii) விண்ணப்பத்தில் தேர்வு செய்திருக்கும் பதவி முன்னுரிமையே இறுதியானது. பின்னர் கோரப்படும் பதவி முன்னுரிமை பற்றிய எந்த முறையீடும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

iv) விண்ணப்பதாரர்கள் பதவி முன்னுரிமையில் ஒரு பதவியை மட்டும் தேர்வு செய்துவிட்டு, மற்ற பதவிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படவில்லையெனில் அவர்கள் மற்ற பதவிகளுக்கு தகுதியுடையவராய் இருப்பினும் தேர்வு செய்யப்படும் வாய்ப்பை இழக்க நேரிடும்.

இ. விண்ணப்பதாரர்கள் காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப அவர் விரும்பும் பதவிக்கு கொடுத்துள்ள முன்னுரிமை, மொத்த மதிப்பெண்கள் மற்றும் வகுப்பு வாரி, சிறப்பு ஒதுக்கீடு விகித்தாச்சார அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர்.

ஈ. விண்ணப்பதாரர்கள் பிற பதவிக்கான மதிப்பெண் பெற்றிருந்தாலும், முன்னுரிமை தெரிவித்த முதல் பதவிக்கே தேர்வு செய்யப்படுவார்கள். பின்னர் கோரப்படும் எந்தவிதமான பதவி மாற்ற வேண்டுதல்கள், எக்காரணத்தை முன்னிட்டும் பரிசீலிக்கப் படமாட்டாது.

உ. சார்ந்துள்ள வாரிசுக்கான விண்ணப்பதாரர்கள் தங்கள் பெற்றோர் சார்ந்த துறையின் கீழ் மட்டுமே பரிசீலிக்கப்படுவார்கள்.

16. **தேர்வு முறைகள்:**

இத்தேர்வானது கீழ்காணும் தேர்வு நிலைகளின்படி நடத்தப்படும்.

| வ. எண். | தேர்வு நிலைகள் | மதிப்பெண்கள் | விவரம் |
|---|---|---|---|
| 1. | தமிழ்மொழி தகுதித் தேர்வு | 80 | இத்தேர்வு தகுதித் தேர்வேயாகும்.<br>தமிழ்மொழி தகுதித் தேர்வின் முழுமையான விவரங்கள் வரிசை எண்.17. - அ. பகுதி- I ல் குறிப்பிடப்பட்டுள்ளன. |
| 2. | முதன்மை எழுத்துத் தேர்வு | 70 | முதன்மை எழுத்துத் தேர்வில் பொது அறிவு மற்றும் உளவியல் தொடர்பான கேள்விகள் கேட்கப்படும்.<br>இத்தேர்வின் முழுமையான விவரங்கள் வரிசை எண்.17 - அ. பகுதி-II ல் குறிப்பிடப்பட்டுள்ளன. |
| 3 | சான்றிதழ் சரிபார்த்தல் | இல்லை | சான்றிதழ் சரிபார்த்தலின் முழுமையான விவரங்கள் வரிசை எண்.17 - ஆ. பகுதி I -ல் குறிப்பிடப்பட்டுள்ளன. |
| 4. | உடற்கூறு அளத்தல் | இல்லை | உடற்கூறு அளத்தல் தகுதித் தேர்வேயாகும். உடற்கூறு அளத்தல் தேர்வின் முழுமையான விவரங்கள் வரிசை எண்.17 - ஆ. பகுதி II -ல் குறிப்பிடப்பட்டுள்ளன.<br>(முன்னாள் இராணுவத்தினர் / இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்கு பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வு பெறவுள்ள இராணுவத்தினர் / முன்னாள் மத்திய ஆயுத காவல் படையினருக்கு உடற்கூறு அளத்தல் தேர்வில் இருந்து விலக்கு அளிக்கப்படுவார்கள்). |
| 5. | உடல் உறுதி தேர்வு | இல்லை | உடல் உறுதி தேர்வு தகுதித் தேர்வேயாகும்.<br>உடல் உறுதி தேர்வின் முழுமையான விவரங்கள் வரிசை எண்.17 - ஆ. பகுதி III -ல் குறிப்பிடப்பட்டுள்ளன. |
| 6. | உடற்திறன் போட்டிகள் | 24 | உடற்திறன் போட்டிகளில் அனைத்து நிகழ்வுகளிலும் பங்கு பெற வேண்டும். உடற்திறன் போட்டிகளின் முழுமையான விவரங்கள் வரிசை எண்.17 - ஆ. பகுதி IV, வரிசை எண்.18 - ல் குறிப்பிடப்பட்டுள்ளன. |
| 7. | சிறப்பு மதிப்பெண்கள் | 6 | தேசிய மாணவர் படை சான்றிதழ் (NCC) - 2 மதிப்பெண்கள்<br>நாட்டு நலப்பணித் திட்ட சான்றிதழ் (NSS) - 2 மதிப்பெண்கள்<br>விளையாட்டு சான்றிதழ் (Sports / Games) - 2 மதிப்பெண்கள்<br>ஒவ்வொரு சான்றிதழுக்கும் மதிப்பெண் வழங்கும் விவரம் வரிசை எண்.20-ல் குறிப்பிடப்பட்டுள்ளன. |

17. **விண்ணப்பதாரர்களுக்கான தேர்வு நிலைகள்:**

**(அ) எழுத்துத் தேர்வு**

**பகுதி – I. தமிழ் மொழி தகுதித் தேர்வு:**

(i) தமிழ் மொழி தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறுவது கட்டாயமாகும்.

(ii) இத்தேர்வானது கொள்குறி வகை வினாத்தாளாக இருக்கும்.

(iii) இத்தேர்வானது 80 மதிப்பெண்களுக்கான 80 வினாக்களை கொண்டது. இத்தேர்விற்கான கால அளவு 80 நிமிடங்கள். (1 மணி 20 நிமிடங்கள்).

(iv) ஒரு வினாவிற்கு தலா 1 மதிப்பெண் ஒதுக்கப்படும்

(v) தமிழ் மொழித் தகுதித் தேர்வில் குறைந்தபட்சம் 32 மதிப்பெண்கள் (40%) பெற்று தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்களின் முதன்மை எழுத்துத் தேர்வின் OMR விடைதாள்கள் மட்டுமே மதிப்பீடு செய்யப்படும்.

(vi) தமிழ் மொழித் தகுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் எந்த நிலையிலும் தற்காலிகத் தேர்வுப் பட்டியலைத் தயாரிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

**பகுதி – II. முதன்மை எழுத்துத் தேர்வு:**

**பகுதி-அ**: பொது அறிவு - 45 மதிப்பெண்கள் 45 கேள்விகளை கொண்டது (கொள்குறி வினா வகை)

**பகுதி-ஆ**: உளவியல் - 25 மதிப்பெண்கள் 25 கேள்விகளை கொண்டது (கொள்குறி வினா வகை)

| |
|---|
| i. இத்தேர்வானது 70 மதிப்பெண்களுக்கான 70 வினாக்களை கொண்டது. இத்தேர்விற்கான கால அளவு நேரம் 80 நிமிடங்கள் (1 மணி 20 நிமிடங்கள்). |
| ii. ஒவ்வொரு வினாவிற்கும் தலா 1 மதிப்பெண் வழங்கப்படும். |
| iii. விண்ணப்பதாரர்கள் முதன்மை எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற குறைந்தபட்சம் 25 மதிப்பெண்கள் (35%) பெற்றிருக்க வேண்டும். |
| iv. எழுத்துத் தேர்வு மாவட்ட / மாநகர தேர்வு மையங்களில் நடைபெறும். விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் கலந்து கொள்வதற்கான விருப்பப்பட்ட மாவட்ட / மாநகரத்தை இணையவழி விண்ணப்பத்தில் தேர்வு செய்து கொள்ளலாம். |

| |
|---|
| v. விண்ணப்பதாரர்களின் அதிகபட்ச மதிப்பெண்களின் அடிப்படையில் மொத்த காலிப் பணியிட எண்ணிக்கைக்கு ஏற்றவாறு வகுப்பு வாரியாக சிறப்பு ஒதுக்கீட்டின் ஐந்து மடங்கு 1:5 என்ற விகிதாச்சாரப்படி விண்ணப்பதாரர்கள் அடுத்த கட்ட தேர்வான, அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தல், உடல்கூறு அளத்தல், உடல் உறுதி தேர்வு மற்றும் உடல்திறன் போட்டி ஆகியனவற்றிற்கு அழைக்கப்படுவார்கள். இருப்பினும், அந்தந்தப் பிரிவின் நிர்ணய மதிப்பெண்களின் அதே மதிப்பெண்களைப் பெறும் அனைத்து விண்ணப்பதாரர்களும் அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தல், உடல்கூறு அளத்தல், உடல் உறுதி தேர்வு மற்றும் உடல்திறன் போட்டிகளுக்கு கூடுதல் விண்ணப்பதாரர்களாக அனுமதிக்கப்படுவார்கள். ஆகையால் அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தல், உடல்கூறு அளத்தல், உடல் உறுதி தேர்வு மற்றும் உடல்திறன் போட்டிகளுக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 1:5 விகிதத்தை விட அதிகமாக இருக்ககூடும். |
| vi. <u>எழுத்து தேர்வுக் கூடச் சீட்டு</u>: எழுத்துத் தேர்விற்கு அனுமதிக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்குரிய தேர்வுக்கூடச் சீட்டு, இவ்வாரிய **(www.tnusrb.tn.gov.in)** இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். விண்ணப்பதாரர் எழுத்து தேர்வு எழுதுவதற்கு தனது தேர்வுக்கூடச் சீட்டை இணையதளத்திலிருந்து பயனர் எண் (User ID) மற்றும் கடவுச் சொல்லைப் (Password) பதிவிட்டுப் பதிவிறக்கம் செய்து வண்ண அச்சிட்டில் (Colour print) எடுத்துக் கொள்ளலாம். |
| vii. எழுத்துத் தேர்வுக்கான முதல்நிலை விடை குறிப்பு (Preliminary Answer Key) வெளியிட்ட பிறகு, விண்ணப்பதாரர்கள் கேள்விகள் அல்லது பதில்களில் ஏதேனும் முரண்பாடு இருந்தால் அதற்கான தக்க ஆதாரங்களுடன்<br>1. விண்ணப்பதாரரின் பெயர், 2. சேர்க்கை எண், 3. வினாத்தாள் வகை மற்றும் 4. வினா எண் ஆகிய விவரங்களுடன் கோரிக்கையாக ஒன்பது நாட்களுக்குள் கடிதம் வாயிலாகவோ அல்லது நேரடியாகவோ "காவல்துறை தலைவர் / உறுப்பினர் செயலர், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், பழைய ஆணையர் அலுவலக வளாகம், பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை-600008". என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். ஒன்பது நாட்களுக்கு பிறகு பெறப்படும் எந்தவொரு கோரிக்கை மனுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. |

**ஆ. உடற்தகுதி தேர்வு :**

பகுதி - **I. சான்றிதழ் சரிபார்த்தல்:**

(i) விண்ணப்பதாரர்களுக்கு உடற்கூறு அளத்தல், உடல் உறுதி தேர்வு மற்றும் உடல்திறன் போட்டிகளுக்கு முன்னர் சான்றிதழ் சரிபார்த்தல் சம்மந்தப்பட்ட தேர்வு மையத்தில் நடைபெறும்.

(ii) சான்றிதழ் சரிபார்ப்புக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பத்தில் பதிவேற்றம் செய்த அனைத்து சான்றிதழ்களின் அசல் சான்றிதழ்களை காண்பிக்க வேண்டும். சான்றிதழ் சரிபார்ப்பின் போது இணையவழி விண்ணப்பத்தில் பதிவேற்றம் செய்த சான்றிதழ்கள் தவிர, வேறு எந்த புதிய சான்றிதழும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(iii) சான்றிதழ்கள் சரிபார்த்தலின் போது விண்ணப்பதாரர்கள் தங்களது அசல் சான்றிதழ்களில் ஏதேனும் சான்றிதழ்கள் சமர்ப்பிக்காவிடில் விண்ணப்பதாரர் தான் கோரும் கல்வி தகுதி, வயது தளர்வு, வகுப்புவாரி ஒதுக்கீடு, முன்னுரிமை, சிறப்பு ஒதுக்கீடு மற்றும் சிறப்பு மதிப்பெண்களை இழப்பர்.

பகுதி - **II. உடற்கூறு அளத்தல் தேர்வு**:

(i) விண்ணப்பதாரர்களுக்கான உடற்கூறு அளத்தல் விவரங்கள் பின்வருமாறு:

| **உயரம் அளத்தல்** | | |
|---|---|---|
| **வகுப்புவாரி பிரிவு** | **ஆண்கள்** | **பெண்கள்** |
| பொதுப் பிரிவினர் (OC), பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC), பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) [BC(M)], மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் (MBC / DNC) | குறைந்தபட்சம் 170 செ.மீ. | குறைந்தபட்சம் 159 செ.மீ. |
| ஆதிதிராவிடர் (SC), ஆதிதிராவிடர் (அருந்ததியர்) [SC (A)], பழங்குடியினர் (ST). | குறைந்தபட்சம் 167 செ.மீ. | குறைந்தபட்சம் 157 செ.மீ. |
| **மார்பளவு அளத்தல் (ஆண்களுக்கு மட்டும்)** | | |
| சாதாரண நிலையில் | குறைந்தபட்சம் 81 செ.மீ. | |
| மூச்சு உள்ளிழுக்கப்பட்ட நிலையில் விரிவாக்கம் | குறைந்தபட்சம் 5 செ.மீ. | |
| முன்னாள் இராணுவத்தினர் / இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதியிலிருந்து ஓராண்டு காலத்திற்குள் ஓய்வு பெறவுள்ள இராணுவ வீரர்கள் / முன்னாள் மத்திய ஆயுத காவல் படை வீரர்கள். | உடற்கூறு அளத்தல் தேர்விலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. | |

(ii) **உயரம் மற்றும்** மார்பு **அளத்தலில் முழு எண்ணாக்குதல்**: அனைத்து உடற்கூறு அளவுகளும் (உயரம் மற்றும் மார்பு) முழு எண்ணுக்கு அருகிலுள்ள 0.5 செ.மீ அளவானது கீழ்காணும் முறையில் எடுத்துக் கொள்ளப்படும்.

| உண்மையான அளவு (செ.மீ) | கருதப்படும் அளவு முழு எண் (செ.மீ) |
|---|---|
| 169.6 | 169.5 |

| | |
|---|---|
| 169.7 | 169.5 |
| 169.8 | 170.0 |
| 169.9 | 170.0 |
| 170.1 | 170.0 |
| 170.2 | 170.0 |
| 170.3 | 170.5 |
| 170.4 | 170.5 |

இதேமுறை மார்பு (ஆண் விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்) அளத்தலிலும் பின்பற்றப்படும். பெண் விண்ணப்பதாரர்களுக்கும் உயரம் அளத்தலில் இதேமுறை பின்பற்றப்படும்.

(iii) **உடற்கூறு அளத்தலில் மேல்முறையீடு:** ஆண் மற்றும் பெண் விண்ணப்பதாரர்கள் உடற்கூறு அளத்தலில் உயரம் மற்றும் மார்பு (ஆண் விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்) அளவுகளில் அதிருப்தி இருப்பின் துணைக் குழு தலைவர் **(Sub-Committee Chairperson)** அவர்களிடம் மேல்முறையீடு செய்ய வேண்டும். அவ்வாறு மேல்முறையீடு செய்ய தவறினால் பின்னர் எந்தவகையிலும் மேல்முறையீடு செய்ய இயலாது.

(iv) உடற்கூறு அளத்தல் தேர்வின் முடிவில், படிவத்தில் (**OMR Coding Sheet**) உயரம் மற்றும் மார்பு (ஆண் விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்) அளவுகளின் பதிவுகளை கவனமுடன் சரிபார்த்து விண்ணப்பதாரர்கள் அப்படிவத்தில் கண்டிப்பாக கையொப்பம் இடவேண்டும்.

(v) உடற்கூறு அளத்தல் தேர்வு தகுதித் தேர்வேயாகும்.

(vi) முன்னாள் இராணுவத்தினர், முன்னாள் மத்திய ஆயுத காவல்படையினர் மற்றும் விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதியிலிருந்து ஓராண்டு காலத்திற்குள் ஓய்வு பெறவுள்ள இராணுவத்தினருக்கு உடற்கூறு அளத்தல் தேர்விலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(vii) உடற்கூறு அளத்தல் தேர்வில் தகுதி பெற்றவர்கள் அடுத்த கட்டத் தேர்வான உடல் உறுதி தேர்வுக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

(viii) அரசு மருத்துவமனை மற்றும் பிற முகமைகளிலிருந்து பெற்ற உயரம் மற்றும் மார்பளவு சம்மந்தமான சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**பகுதி - III. உடல் உறுதி தேர்வு :**

(i) விண்ணப்பதாரர்களுக்கான உடல் உறுதி தேர்விற்கான விதிமுறைகள் பின்வருமாறு:

| | |
|---|---|
| ஆண்கள் | 1500 மீட்டர் தூரத்தை 7 நிமிடங்கள் அல்லது அதற்கு குறைவான நேரத்தில் ஓடி முடிக்க வேண்டும். |

| | |
|---|---|
| பெண்கள் | 400 மீட்டர் தூரத்தை 2 நிமிடங்கள் 30 வினாடிகள் அல்லது அதற்கு குறைவான நேரத்தில் ஓடி முடிக்க வேண்டும். |
| முன்னாள் இராணுவத்தினர் / இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதியிலிருந்து ஓராண்டு காலத்திற்குள் ஓய்வு பெறவுள்ள இராணுவ வீரர்கள் / முன்னாள் மத்திய ஆயுத காவல் படை வீரர்கள். | 1500 மீட்டர் தூரத்தை 8 நிமிடங்கள் அல்லது அதற்கு குறைவான நேரத்தில் ஓடி முடிக்க வேண்டும். |

(ii) உடல் உறுதி தேர்வானது தகுதித் தேர்வேயாகும்.

(iii) உடல் உறுதி தேர்வில் தகுதி பெறுபவர்கள் மட்டுமே, அடுத்த கட்டத் தேர்வான உடற்திறன் போட்டிகளுக்கு (Physical Efficiency Test) அனுமதிக்கப்படுவார்கள்.

(iv) தேர்வுமையத்தில் எச்சூழ்நிலையிலும் உடல்நலக்குறைவு அல்லது எவ்விதமான காயங்களுக்காகவும் மறுவாய்ப்பு வழங்கப்பட மாட்டாது.

**பகுதி - IV. உடற்திறன் போட்டி: (மொத்த மதிப்பெண்கள் - 24)**

i. விண்ணப்பதாரர்களுக்கு ஒவ்வொரு நிகழ்விலும், ஒரு நட்சத்திரம் பெற்றால், 4 மதிப்பெண்களும், இரண்டு நட்சத்திரங்கள் பெற்றால் 8 மதிப்பெண்களும் அளிக்கப்படும். விண்ணப்பதாரர் ஒரு நட்சத்திரம் கூட பெறவில்லை என்றாலும் அவர்களுக்கு 0 (பூஜ்யம்) மதிப்பெண் வழங்கப்பட்டு அவர்கள் அடுத்த நிகழ்வுக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

ii. விண்ணப்பதாரர்கள் மூன்று நிகழ்வுகளிலும், அதிகபட்சம் 6 நட்சத்திரங்கள் பெற்றால் 24 மதிப்பெண்கள் பெறலாம்.

iii. விண்ணப்பதாரர்கள் மூன்று நிகழ்வுகளிலும் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும். ஏதேனும் ஓர் நிகழ்வில் பங்குபெறாவிடினும் தகுதியிழப்பு செய்யப்படுவர்.

**18. உடற்திறன் போட்டி பற்றிய விவரங்கள் பின்வருமாறு:**

**(I) ஆண் விண்ணப்பதாரர்கள்:-**

| வ. எண் | நிகழ்வுகள் | | பூஜ்ய நட்சத்திரம் (0 மதிப்பெண்) | ஒரு நட்சத்திரம் (4 மதிப்பெண்கள்) | இரண்டு நட்சத்திரங்கள் (8 மதிப்பெண்கள்) |
|---|---|---|---|---|---|
| **1.** | கயிறு ஏறுதல் | | 5.0 மீட்டருக்கு குறைவாக | 5.0 மீட்டர் மற்றும் அதற்கு அதிகமாக & 6.0 மீட்டருக்கு குறைவாக | 6.0 மீட்டர் மற்றும் அதற்கு அதிகமாக |
| **2.** | தாண்டுதல் | நீளம் தாண்டுதல் | 3.80 மீட்டருக்கு குறைவாக | 3.80 மீட்டர் மற்றும் அதற்கு அதிகமாக & 4.50 மீட்டருக்கு குறைவாக | 4.50 மீட்டர் மற்றும் அதற்கு அதிகமாக |
| | | உயரம் | 1.20 மீட்டருக்கு | 1.20 மீட்டர் | 1.40 மீட்டர் மற்றும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | தாண்டுதல் | குறைவாக | மற்றும் அதற்கு அதிகமாக & 1.40 மீட்டருக்கு குறைவாக | அதற்கு அதிகமாக |
| 3. | ஓட்டம் | 100 மீட்டர் ஓட்டம் | 15.00 வினாடிகளுக்கு அதிகமாக | 15.00 வினாடிகள் மற்றும் அதற்கு குறைவாக & 13.50 வினாடிகளுக்கு அதிகமாக | 13.50 வினாடிகள் மற்றும் அதற்கு குறைவாக |
| | | 400 மீட்டர் ஓட்டம் | 80.00 வினாடிகளுக்கு அதிகமாக | 80.00 வினாடிகள் மற்றும் அதற்கு குறைவாக & 70.00 வினாடிகளுக்கு அதிகமாக | 70.00 வினாடிகள் மற்றும் அதற்கு குறைவாக |

(i) ஆண் விண்ணப்பதாரர்கள் கயிறு ஏறுதல் நிகழ்வில் கைகளை மட்டுமே உபயோகித்து கயிறு ஏற வேண்டும், கால்கள் மற்றும் உடல் பாகங்களை உபயோகப்படுத்தினால் பூஜ்ய நட்சத்திரம் வழங்கப்படும் (0 மதிப்பெண்கள்).

(ii) கயிறு ஏறுதல் மற்றும் நீளம் தாண்டுதல் / உயரம் தாண்டுதல் நிகழ்வில் இரண்டு வாய்ப்புகள் வழங்கப்படும். இவ்விரண்டு வாய்ப்பில் எந்த அளவு அதிகமானதோ அந்த அளவுக்குரிய நட்சத்திரம் மற்றும் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

(iii) 100 மீட்டர் / 400 மீட்டர் ஓட்டம் ஆகிய நிகழ்வுகளில் ஒரே ஒரு வாய்ப்பு மட்டுமே விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.

**(II) பெண் விண்ணப்பதாரர்கள்:**

| வ. எண் | நிகழ்வுகள் | | பூஜ்ய நட்சத்திரம் (**0** மதிப்பெண்) | ஒரு நட்சத்திரம் (**4** மதிப்பெண்கள்) | இரண்டு நட்சத்திரங்கள் (**8** மதிப்பெண்கள்) |
|---|---|---|---|---|---|
| 1. | நீளம் தாண்டுதல் | | 3.0 மீட்டருக்கு குறைவாக | 3.0 மீட்டர் மற்றும் அதற்கு அதிகமாக & 3.75 மீட்டருக்கு குறைவாக | 3.75 மீட்டர் மற்றும் அதற்கு அதிகமாக |
| 2. | எறிதல் | குண்டு எறிதல் (4 கிலோ) | 4.25 மீட்டருக்கு குறைவாக | 4.25 மீட்டர் மற்றும் அதற்கு அதிகமாக & 5.50 மீட்டருக்கு குறைவாக | 5.50 மீட்டர் மற்றும் அதற்கு அதிகமாக |
| | | கிரிக்கெட் பந்து எறிதல் | 17 மீட்டருக்கு குறைவாக | 17 மீட்டர் மற்றும் அதற்கு அதிகமாக & 24 மீட்டருக்கு குறைவாக | 24 மீட்டர் மற்றும் அதற்கு அதிகமாக |
| 3. | ஓட்டம் | 100 மீட்டர் ஓட்டம் | 17.50 வினாடிகளுக்கு அதிகமாக | 17.50 வினாடிகள் மற்றும் அதற்கு குறைவாக & 15.50 வினாடிகளுக்கு அதிகமாக | 15.50 வினாடிகள் மற்றும் அதற்கு குறைவாக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 200 மீட்டர் ஓட்டம் | 38.00 வினாடிகளுக்கு அதிகமாக | 38.00 வினாடிகள் மற்றும் அதற்கு குறைவாக & 33.00 வினாடிகளுக்கு அதிகமாக | 33.00 வினாடிகள் மற்றும் அதற்கு குறைவாக |

(i) நீளம் தாண்டுதல் மற்றும் குண்டு எறிதல் / கிரிக்கெட் பந்து எறிதல் நிகழ்வுகளுக்கு இரண்டு வாய்ப்புகள் வழங்கப்படும். இரண்டு வாய்ப்பில் எந்த அளவு அதிகமானதோ அந்த அளவுக்குரிய நட்சத்திரம் மற்றும் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

(ii) 100 மீட்டர் / 200 மீட்டர் ஓட்டம் ஆகிய நிகழ்வுகளில் ஒரே ஒரு வாய்ப்பு மட்டுமே விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.

(III) **முன்னாள் இராணுவத்தினர் / இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதியிலிருந்து ஓராண்டு காலத்திற்குள் ஓய்வு பெறவுள்ள இராணுவ வீரர்கள் / முன்னாள் மத்திய ஆயுத காவல்படையினர்:**

| **வ. எண்** | **நிகழ்வுகள்** | | **பூஜ்ய நட்சத்திரம் (0 மதிப்பெண்)** | **ஒரு நட்சத்திரம் (4 மதிப்பெண்கள்)** | **இரண்டு நட்சத்திரங்கள் (8 மதிப்பெண்கள்)** |
|---|---|---|---|---|---|
| 1 | குண்டு எறிதல் (7.26 kg) | | 5.0 மீட்டருக்கு குறைவாக | 5.0 மீட்டர் மற்றும் அதற்கு அதிகமாக & 6.0 மீட்டருக்கு குறைவாக | 6.0 மீட்டர் மற்றும் அதற்கு அதிகமாக |
| 2 | தாண்டுதல் | நீளம் தாண்டுதல் | 3.25 மீட்டருக்கு குறைவாக | 3.25 மீட்டர் மற்றும் அதற்கு அதிகமாக & 4.50 மீட்டருக்கு குறைவாக | 4.50 மீட்டர் மற்றும் அதற்கு அதிகமாக |
| | | உயரம் தாண்டுதல் | 0.90 மீட்டருக்கு குறைவாக | 0.90 மீட்டர் மற்றும் அதற்கு அதிகமாக & 1.40 மீட்டருக்கு குறைவாக | 1.40 மீட்டர் மற்றும் அதற்கு அதிகமாக |
| 3 | ஓட்டம் | 100 மீட்டர் ஓட்டம் | 17.00 வினாடிகளுக்கு அதிகமாக | 17.00 வினாடிகள் மற்றும் அதற்கு குறைவாக & 13.50 வினாடிகளுக்கு அதிகமாக | 13.50 வினாடிகள் மற்றும் அதற்கு குறைவாக |
| | | 400 மீட்டர் ஓட்டம் | 85.00 வினாடிகளுக்கு அதிகமாக | 85.00 வினாடிகள் மற்றும் அதற்கு குறைவாக & 70.00 வினாடிகளுக்கு அதிகமாக | 70.00 வினாடிகள் மற்றும் அதற்கு குறைவாக |

(i) குண்டு எறிதல் மற்றும் நீளம் தாண்டுதல் / உயரம் தாண்டுதல் நிகழ்வுகளில் இரண்டு வாய்ப்புகள் வழங்கப்படும். இவ்விரண்டு வாய்ப்பில் எந்த அளவு அதிகமானதோ அந்த அளவுக்குரிய நட்சத்திரம் மற்றும் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

(ii) 100 மீட்டர் / 400 மீட்டர் ஓட்டம் ஆகிய நிகழ்வுகளில் ஒரு வாய்ப்பு மட்டுமே விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.

(IV) உடல் உறுதி தேர்வு மற்றும் உடற்திறன் போட்டி தேர்வின் முடிவில் ஓட்டம், கயிறு ஏறுதல், குண்டு எறிதல், மற்றும் தாண்டுதல் ஆகியவற்றில் பெற்ற நட்சத்திரங்கள் மற்றும் மதிப்பெண்கள் படிவத்தில் (OMR Coding Sheet) பதிவு செய்துள்ளதை கவனமுடன் சரிபார்த்து விண்ணப்பதாரர்கள் அப்படிவத்தில் கண்டிப்பாக கையொப்பம் இடவேண்டும்.

**19. மகப்பேறு காலத்திலுள்ள பெண் விண்ணப்பதாரர்கள்:**

(i) மகப்பேறு காலத்திலுள்ள பெண் விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பம் சமர்ப்பிக்கும் போது அவ்விண்ணப்பத்தில் தனது மகப்பேறு நிலையை குறிப்பிட வேண்டும். மேலும் விண்ணப்பத்தில் மகப்பேறு நிலையை குறிப்பிடாத விண்ணப்பதாரர்களுக்கு இச்சலுகை வழங்கப்பட மாட்டாது.

(ii) உடற்கூறு அளத்தல் தேர்வின் போது மகப்பேறு காலத்திலுள்ள பெண் விண்ணப்பதாரர்கள் தேர்வுமைய துணைக்குழு தலைவரிடம் தனது மகப்பேறு நிலையினை தெரிவிக்க வேண்டும்.

(iii) மகப்பேறு காலத்திலுள்ள பெண் விண்ணப்பதாரர்கள் உடற் தேர்வுகளில் கலந்து கொள்ள இயலாதென அரசு மருத்துவரால் சான்றிதழ் அளிக்கும்பட்சத்தில், தேர்வு நடைமுறையிலிருந்து தற்காலிகமாக விலக்களிக்கப்படுகிறார்கள், மேலும் இத்தேர்வு தொடர்பான செயல்பாடு ஒவ்வொரு 6 மாதங்களுக்கு ஒருமுறை அதாவது பிப்ரவரி முதல் வாரம் மற்றும் ஆகஸ்ட் முதல் வாரத்தில் மேற்படி விண்ணப்பதாரர்களுக்கு நடத்தப்படும்.

(iv) மகப்பேறு காரணமாக முதற்கட்ட உடற்கூறு அளத்தல் மற்றும் பிற தேர்வுகளில் கலந்து கொள்ள இயலாத பெண் விண்ணப்பதாரர்கள், இத்தேர்வில் தங்களது குழு பணிமூப்பை (Batch Seniority) இழக்கமாட்டார்கள். அடுத்த கட்டமாக நடத்தப்படும் தேர்வு நடைமுறைகளில் மகப்பேறு விண்ணப்பதாரர்கள் தேர்வு பெற்றால் அவர்களது குழு பணிமூப்பு (Batch Seniority) தான் தேர்ச்சி பெற்ற எழுத்து தேர்வின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும்.

(v) மகப்பேறு காலத்திலுள்ள பெண் விண்ணப்பதாரர்கள், உடல் உறுதி தேர்வு மற்றும் உடற்திறன் தேர்வுகளில் கலந்து கொள்ள விருப்பப்பட்டால், அரசு மருத்துவரிடம் பெற்ற உடற்தகுதி சான்றிதழ் மற்றும் விண்ணப்பதாரரின் சுய அறிவிப்பு / உறுதிமொழி கடிதத்தையும் சமர்ப்பிக்க வேண்டும், மேலும் உடல் தகுதி தேர்வின் போது எந்த கூடுதல் சலுகையும் கோர இயலாது.

20. **சிறப்பு மதிப்பெண்கள்:** தேசிய மாணவர் படை, நாட்டு நலப் பணித் திட்டம் மற்றும் விளையாட்டுகள் (**NCC, NSS and Sports / Games):**

உடற்கூறு அளத்தல், உடல் உறுதி தேர்வு மற்றும் உடற்திறன் போட்டிகளில் பங்கு பெறுபவர்கள் NCC, NSS மற்றும் Sports / Games ஆகியவற்றில் ஏதேனும் சான்றிதழ் வைத்திருப்பின், அவர்கள் சிறப்பு மதிப்பெண்களாக, அதிகபட்சம் 6 மதிப்பெண்கள் பெற தகுதியுடையவர்கள் ஆவர் (NCC - 2 Marks, NSS - 2 Marks and Sports / Games - 2 Marks). இதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| தேசிய மாணவர் படை (NCC) | (i) | “A” சான்றிதழ் - ½ மதிப்பெண் |
| | (ii) | “B” சான்றிதழ் - 1 மதிப்பெண் |

| | | | |
|---|---|---|---|
| (அதிகபட்ச மதிப்பெண்கள் - 2) | (iii) | “C” சான்றிதழ் - சார்பு அலுவலர் / அகில இந்திய அளவில் சிறந்த மாணவர் - 2 மதிப்பெண்கள். | |
| நாட்டு நலப்பணித் திட்டம் (NSS)<br><br>(அதிகபட்ச மதிப்பெண் - 2) | (i) | மாநில இளைஞர் விருது /<br>தேசிய இளைஞர் விருது /<br>மாநிலங்களுக்கிடையேயான (தேசிய)<br>(அ) பன்னாட்டு நிகழ்ச்சிகளில் பங்குகொண்டவர்களுக்கு<br>ஆ) குடியரசு தின அணி வகுப்பு<br>இ) தேசிய ஒருமைப்பாட்டு முகாம்.<br>ஈ) வீரதீர நிகழ்வுகள்<br>உ) கோடை கால / குளிர்கால முகாம்கள்<br>ஊ) மாநிலங்களுக்கிடையேயான இளைஞர்களுக்கான பரிமாற்ற மற்றும் மாநிலங்களில் தங்கும் நிகழ்வுகள்<br>எ) தேசிய இளைஞர் விழா<br><br>மேற்காணும் சான்றிதழ்கள் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம், இந்திய அரசு, நாட்டு நலப்பணித் திட்ட பிராந்திய மையங்கள், மாநில இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை, (Ministry of Youth Affairs and Sports, Government of India and its Sub-ordinate Office viz. NSS Regional Centres and by the State Governments concerned, Youth Welfare & Sports Department) ஏதேனும் ஒரு துறையால் - வழங்கப்பட்டிருக்க வேண்டும்.<br><br>மேற்காணும் சான்றிதழ்கள், துணை வேந்தர் (Vice Chancellor) / கல்லூரி முதல்வர் / தலைமையாசிரியர் (Head of the Educational Institution) / முதன்மை கல்வி அதிகாரி (Chief Educational Officer) / நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் (Programme Co-ordinator) ஆகியவர்களால் வழங்கப்பட்டிருக்க வேண்டும். | 2<br>மதிப்பெண்கள் |
| | (ii) | நாட்டு நலப் பணி திட்டத்தில் 2 ஆண்டுகள் முடித்தவர்கள் / நாட்டு நலப் பணி திட்டத்தில் பங்கு பெற்று, அரசு ஆணை நிலை எண் 8, தேதி 21.01.2002-ல் உள்ள விதிமுறைகளை நிறைவு செய்தவர்கள் / மாநிலத்தில் நடைபெற்ற சிறப்பு முகாம்களில் பங்குகொண்டமைக்கான சான்றிதழ் பெற்றவர்கள் - 1 மதிப்பெண். | |

| | | |
|---|---|---|
| | (iii) | திட்டச்செயல் தொண்டர்கள், மாவட்டத்திற்குள் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் - ½ மதிப்பெண். |
| விளையாட்டுகள் / தடகளப் போட்டிகள் (Sports / Games) (அதிகபட்ச மதிப்பெண்கள் - 2) | (i) | பள்ளியின் சார்பாக பள்ளிகளுக்கிடையேயான கல்வி மாவட்டங்கள் நடத்தும் போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் - ½ மதிப்பெண். |
| | (ii) | கல்லூரியின் சார்பாக கல்லூரிகளுக்கிடையேயான மண்டலப் போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் (Zonal Matches) - ½ மதிப்பெண். |
| | (iii) | தமிழ்நாடு பல்கலைக்கழகங்களின் சார்பாக பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் (Inter University) படிவம் - III - 1 மதிப்பெண் |
| | (iv) | மாவட்டங்கள் சார்பாக மாவட்டங்களுக்கு இடையேயான போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் (Inter District) - 1 மதிப்பெண். |
| | (v) | தமிழ்நாடு மாநிலத்தின் சார்பாக மாநிலங்களுக்கு இடையேயான போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் படிவம் - II - 1½ மதிப்பெண்கள். |
| | (vi) | தேசத்தின் சார்பாக பன்னாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டவர்கள் படிவம் - I - 2 மதிப்பெண்கள். |

விண்ணப்பதாரர்கள் வைத்திருக்கும் NCC / NSS / Sports / Games சான்றிதழ்களில், ஒவ்வொரு வகை சான்றிதழ்களிலும், உயரிய தகுதி கொண்ட ஒரு சான்றிதழுக்கு மட்டுமே உயர் அளவு மதிப்பெண் வழங்கப்படும். மேலே கூறப்பட்ட மூன்று வகைச் சான்றிதழ்களுக்கும் சேர்த்து அதிகபட்சமாக மொத்தம் 6 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

NCC / NSS / Sports / Games-ல் ஒரே மதிப்பெண் தகுதியில் ஒரு விண்ணப்பதாரர் இரண்டு சான்றிதழ்கள் வைத்திருக்கும் பட்சத்தில், ஒரு சான்றிதழுக்கு மட்டுமே மதிப்பெண் வழங்கப்படும்.

**அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுகள்** : 1. கூடைப்பந்து 2. கால்பந்து 3. வளைகோல் பந்து 4. கையுந்துப்பந்து 5. கைப்பந்து 6. கபடி 7. மல்யுத்தம் 8. குத்துச் சண்டை 9. ஜிம்னாஸ்டிக்ஸ் 10. ஜூடோ 11. பளு தூக்குதல் 12. நீச்சல் போட்டி 13. தடகளப் போட்டிகள் 14. குதிரையேற்றம், 15. துப்பாக்கி சுடுதல் மற்றும் 16. சிலம்பம்*.

* தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அங்கீகரிக்கும் சங்கத்தை பொறுத்தது.

சான்றிதழ்கள் சரி பார்ப்பின்போது விண்ணப்பதாரர்களால் சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்களுக்கு உரிய பரிசீலனையின் போது மேற்கண்ட 16 விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டதற்கான சான்றிதழ் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே பின்னர் சிறப்பு மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**விண்ணப்பதாரர் சமர்ப்பித்த சான்றிதழ்கள் போலியானவை என்று பின்னர் கண்டறியப்பட்டால் விண்ணப்பதாரர்கள் எந்த நிலையில் இருந்தாலும் அவர்கள் தகுதி நீக்கம் செய்யப்படுவதுடன் கூடுதலாக அவர்கள்மீது குற்றவியல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.**

**21. இறுதி தற்காலிகத் தேர்வுப் பட்டியல்:**

i. விண்ணப்பதாரர்கள் எழுத்து தேர்வு, உடற்திறன் போட்டிகள் மற்றும் சிறப்பு மதிப்பெண்கள் ஆகியவற்றில் பெற்ற மொத்த மதிப்பெண்களின் அடிப்படையிலும் மற்றும் விண்ணப்பதாரர்கள் தெரிவித்துள்ள பதவி விருப்ப முன்னுரிமைப்படியும், காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப வகுப்பு வாரி மற்றும் சிறப்பு ஒதுக்கீடு விகிதாச்சார அடிப்படையில் இரண்டாம் நிலை காவலர் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, இரண்டாம் நிலை சிறைக் காவலர் மற்றும் தீயணைப்பாளர் பதவிகளுக்கு தற்காலிகமாகத் தேர்வு செய்யப்படுவார்கள்.

ii. ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் சம மதிப்பெண் பெற்றிருந்தால், வயதில் மூத்தவருக்கு தேர்வில் முன்னுரிமை வழங்கப்படும்.

iii. விண்ணப்பதாரர்கள் பெற்ற மொத்த மதிப்பெண்கள் மற்றும் பிறந்த தேதி ஒரே மாதிரியாக இருந்தால் அவர்களுள் எவரொருவர் மேதகு இந்திய குடியரசுத் தலைவரின் மிக சிறந்த சாரணருக்கான சான்றிதழைப் பெற்றுள்ளாரோ அவருக்கு தரவரிசை பட்டியலில் முன்னுரிமை வழங்கப்படும்.

iv. மொத்த மதிப்பெண்கள் மற்றும் பிறந்த தேதி ஒரே மாதிரியாக இருந்து சாரணர் இயக்கத்தில் மேதகு இந்திய குடியரசுத் தலைவரின் மிக சிறந்த சாரணருக்கான சான்றிதழையும் பெற்றிருப்பின், முதன்மை எழுத்துத் தேர்வு மதிப்பெண்கள் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும்.

v. மொத்த மதிப்பெண்கள் மற்றும் பிறந்த தேதி ஒரே மாதிரியாக இருந்து சாரணர் இயக்கத்தில் மேதகு இந்திய குடியரசுத் தலைவரின் மிக சிறந்த சாரணருக்கான சான்றிதழை பெற்றிருந்து மற்றும் எழுத்துத் தேர்வு மதிப்பெண்ணும் ஒன்றாக இருப்பின் இணையவழி விண்ணப்பம் சமர்பித்ததின் மூப்பு (Seniority) அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும்.

vi. மேலும், தீயணைப்பாளர் பதவிக்கு முன்னுரிமை கொடுத்த விண்ணப்பதாரர்களின் மொத்த மதிப்பெண்கள் மற்றும் பிறந்த தேதி ஒரே மாதிரியாக இருந்து சாரணர் இயக்கத்தில் மேதகு இந்திய குடியரசுத் தலைவரின் மிக சிறந்த சாரணருக்கான சான்றிதழையும் பெற்றிருப்பின், எவரொருவர் நாக்பூரில் உள்ள தேசிய தீயணைப்பு சேவை கல்லூரியில் ஏதேனும் ஒரு பயிற்சி வகுப்பை வெற்றிகரமாக நிறைவு செய்தவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

vii. மேலும், தீயணைப்பாளர் பதவிக்கு முன்னுரிமை கொடுத்த விண்ணப்பதாரர்களின் மொத்த மதிப்பெண்கள் மற்றும் பிறந்த தேதி ஒரே மாதிரியாக இருந்து சாரணர் இயக்கத்தில் மேதகு இந்திய குடியரசுத் தலைவரின் மிக சிறந்த சாரணருக்கான சான்றிதழையும் பெற்று நாக்பூரில் உள்ள தேசிய தீயணைப்பு சேவை கல்லூரியில் ஏதேனும் ஒரு பயிற்சி வகுப்பை வெற்றிகரமாக நிறைவு செய்திருப்பின் முதன்மை எழுத்துத் தேர்வு மதிப்பெண்கள் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும்.

viii. மேலும், தீயணைப்பாளர் பதவிக்கு முன்னுரிமை கொடுத்த விண்ணப்பதாரர்களின் மொத்த மதிப்பெண்கள் மற்றும் பிறந்த தேதி ஒரே மாதிரியாக இருந்து சாரணர் இயக்கத்தில் மேதகு இந்திய குடியரசுத் தலைவரின் மிக சிறந்த சாரணருக்கான சான்றிதழையும் பெற்றிருப்பின், நாக்பூரில் உள்ள தேசிய தீயணைப்பு சேவை கல்லூரியில் ஏதேனும் ஒரு பயிற்சி வகுப்பை வெற்றிகரமாக நிறைவு செய்திருப்பின் முதன்மை எழுத்துத் தேர்வு மதிப்பெண்ணும் ஒன்றாக இருப்பின் இணையவழி விண்ணப்பம் சமர்பித்ததின் மூப் (Seniority) அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும்.

ix. தற்காலிகத் தேர்வுப் பட்டியல் இவ்வாரிய அதிகாரப்பூர்வ இணையதள முகவரியான www.tnusrb.tn.gov.in –ல் வெளியிடப்படும்.

**22. மருத்துவப் பரிசோதனை மற்றும் குணநலன்கள் மற்றும் முந்தைய பழக்கவழக்கங்களை சரிபார்த்தல்:** -

தற்காலிகமாகத் தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு மருத்துவப் பரிசோதனையும், குணநலன்கள் மற்றும் முந்தைய பழக்க வழக்கங்கள் சரிபார்ப்பும், நியமன அதிகாரியால் மேற்கொள்ளப்படும். **(பிற்சேர்கை - IX)**

**23. இணையவழி விண்ணப்பம்:**

i. விண்ணப்பதாரர்கள் **TNUSRB-ன்** அதிகாரப்பூர்வ இணையதள முகவரியான www.tnusrb.tn.gov.in - ல் இணைய வழியில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். வேறு எந்த முறையிலான / வடிவிலான விண்ணப்பம் உறுதியாக நிராகரிக்கப்படும்.

ii. விண்ணப்பதாரர்கள் தங்களது சொந்த மின்னஞ்சல் முகவரி மற்றும் கைபேசி எண்ணை இணையவழி விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் போது பயன்படுத்த வேண்டும். இவை முழு விண்ணப்ப செயல்முறை / தேர்வு நடைமுறைக்கும் பயன்படுத்தப்பட வேண்டும்.

iii. இணையவழி விண்ணப்பத்தில், விண்ணப்பதாரர் குணநலன்கள் மற்றும் முந்தைய பழக்க வழக்கங்கள் சரிபார்ப்புக்காக தனது முகவரி எல்லைக்கு உட்பட்ட காவல் நிலையத்தை குறிப்பிட வேண்டும்.

iv. விண்ணப்பதாரர் இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது தந்தை / தாய் / பாதுகாவலர் ஆகியோரில் ஒருவரின் பெயரை கண்டிப்பாக தெரிவிக்க வேண்டும். ஆனால் மூன்று களத்தையும் நிரப்ப வேண்டிய அவசியமில்லை.

v. தேர்வுகளின் பல்வேறு நிலைகளில் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு தேர்வு கூட சீட்டு / அழைப்பு கடிதங்களை **TNUSRB-ன்** அதிகாரபூர்வ இணையதள முகவரியில் இருந்து விண்ணப்பதாரர்கள் கண்டிப்பாக பதிவிறக்கம் செய்து வண்ண அச்சிட்டில் (Colour print) எடுத்துக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். தபால் மூலமாக தேர்வு கூட சீட்டு / அழைப்பு கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

vi. விண்ணப்பதாரரின் இடது கை கட்டை விரல் ரேகை பிம்பத்தை (image) இணையவழி விண்ணப்பத்தின் ஆவண பதிவேற்ற பிரிவில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

vii. விண்ணப்பதாரர்கள் சமர்ப்பிக்கப்பட்ட இணையவழி விண்ணப்பத்தில் பின்வரும் 1) பெயர் 2) தந்தை / தாய் / பாதுகாவலர் பெயர் 3) கைபேசி எண் 4) மின்னஞ்சல் முகவரி 5) பிறந்த தேதி ஆகிய புலங்களை தவிர பிற புலங்களை 22.09.2025 முதல் 25.09.2025 வரை திருத்தம் செய்யலாம்.

**24. தேர்வுக் கட்டணம்:**

தேர்வுக் கட்டணம் ரூ. 250/- ஆகும். தேர்வுக் கட்டணத்தை இணைய வழியில் மட்டுமே செலுத்த இயலும்.

A) **இணையவழி வாயிலாக கட்டணம் செலுத்துதல் குறித்த அறிவுறுத்தல்:**

(i) விண்ணப்பதாரர் இணையவழி வாயிலாக தேர்வுக் கட்டணம் செலுத்துவற்கு வலைவங்கி (Net banking) - கடன் அட்டை (Credit Card) / பற்று அட்டை (Debit Card- Rupay Card Only) / ஒருங்கிணைந்த பரிவர்த்தனை தரவு (UPI) விருப்பத்தினை தேர்வு செய்து தேர்வுக் கட்டணத்தை செலுத்த முற்படுகையில் ஏதேனும் தடங்கல் அல்லது துண்டிப்பு அல்லது ஏதேனும் காரணங்களுக்காக தேர்வுக் கட்டணம் செலுத்த முடியாமல் ரத்து செய்யப்பட்டால், அதன் பின்னர், விண்ணப்பதாரர்கள் சில நிமிடங்களுக்கு பிறகு கட்டணம் செலுத்த அறிவுறுத்தபடுகிறார்கள்.

(ii) தேர்வுக் கட்டணம் ஏற்றுக் கொள்ளப்பட்டால் தேர்வுக் கட்டணம் செலுத்திய விவரம் விண்ணப்பதாரரின் கட்டுப்பாட்டகத்தில் (Dashboard) 24 மணி நேரத்திற்குள் பிரதிபலிக்கும்.

(iii) இணையவழி கட்டணம் செலுத்துவதில் ஏதேனும் இடையூறு ஏற்பட்டால் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் பொறுப்பாகாது. மேலும் தெரியாத காரணங்களால் பணம் செலுத்துவதில் இயலாமை ஏற்பட்டு ஒன்றுக்கு மேற்பட்ட முறை கட்டணம் செலுத்தி இருப்பின் அக்கட்டணம் தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியத்தால் **திரும்ப அளிக்க இயலாது**.

(iv) விண்ணப்பதாரர்கள் கடைசி நிமிட நெரிசல் மற்றும் இடர்பாடுகளை தவிர்க்க கடைசி தேதிக்கு முன்பாகவே விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவும் மற்றும் தேர்வுக் கட்டணத்தை செலுத்தவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

B) **தேர்வுக் கட்டணம் செலுத்தியதை உறுதி செய்தல்** :

(i) விண்ணப்பதாரரது கட்டுப்பாட்டகத்தில் (Dashboard) தேர்வுக் கட்டணம் செலுத்தியதற்கான இரசீது பிரதிபலிக்கும் வரை அவரது வங்கி கணக்கிலிருந்து பணம் வரவு வைக்கப்பட்டது அல்லது அவரது தேர்வுக் கட்டணம் செலுத்தப்பட்டது அல்லது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்று விண்ணப்பதாரர் பொருள் கொள்ளக் கூடாது.

(ii) விண்ணப்பதாரரின் விண்ணப்பம் மற்றும் தேர்வுக் கட்டணம் ஏற்றுக் கொள்ளப்பட்டால் விண்ணப்பதாரர் பதிவு செய்யப்பட்டுள்ள கைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தியும் மற்றும் மின்னஞ்சல் முகவரிக்கு தகவலும்

அனுப்பப்படும்.

(iii) விண்ணப்பதாரர்களுக்கு இணையவழி விண்ணப்பம் பூர்த்தி செய்வது, பணம் செலுத்துதல் மற்றும் விண்ணப்பம் சமர்ப்பிப்பது தொடர்பாக ஏதேனும் சந்தேகங்கள் ஏற்பட்டால் அலுவலக நேரத்தில் கீழ்காணும் எண்களில் உதவி மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

| | |
|---|---|
| தொழில்நுட்பம் தொடர்பான சந்தேகங்கள் | 7305159124<br>helpdesktnusrb@gmail.com |
| விண்ணப்பம் தொடர்பான சந்தேகங்கள் – த.நா.சீ.ப.தே. வாரிய கட்டுப்பாட்டு அறை | 044 - 28413658, 9499008445, 9176243899, 9789035725<br>usrb91@gmail.com /<br>tnusrb@nic.in |
| பணம் செலுத்துதல் தொடர்பான சந்தேகங்கள் | 044 - 25234753<br>acpr1.che2@sbi.co.in |
| மெச்சத்தக்க விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீடு தொடர்பான சந்தேகங்கள் | தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், ஜவஹர்லால் நேரு அரங்கம், ராஜா முத்தையா சாலை, பெரியமேடு, சென்னை - 03.<br>044 - 2561 1522 /<br>+91 9514 000 777<br>sdat@tn.gov.in |

**25. தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரிய தொடர்புக்கு:**

இணையவழி விண்ணப்பம் தொடர்பான கேள்விகள் குறித்து **helpdesktnusrb@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம். பிற சந்தேகங்களுக்கு வாரியத்தின் மின்னஞ்சல் முகவரியான tnusrb@nic.in / usrb91@gmail.com – க்கு அனுப்ப வேண்டும். அஞ்சல் மூலம் அனுப்பப்படும் தகவல் தொடர்புகள் காவல்துறை தலைவர் / உறுப்பினர் செயலாளர், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், பழைய காவல் ஆணையர் அலுவலக வளாகம், பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை - 600008 என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்பப்பட வேண்டும்.

வாரியத்திற்கான அனைத்து தகவல் தொடர்புகளிலும் பின்வரும் விவரங்கள் தவறாமல் இருக்க வேண்டும். பின்வரும் விவரங்கள் இல்லாத தகவல் தொடர்புகள் கருத்தில் எடுத்து கொள்ளப்படாது.

i.) தேர்வின் பெயர் மற்றும் ஆண்டு ii.) பயனர் எண். iii.) விண்ணப்பதாரரின் முழு பெயர் (தடித்த எழுத்துக்களில்) iv.) விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ளபடி முழுமையான அஞ்சல் முகவரி v.) பதிவு செய்யப்பட்ட கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி.

வயது வரம்பு அல்லது பிற தகுதிகளில் இருந்து விலக்கு அளிக்க கோருவது ஏற்று கொள்ளப்படமாட்டாது. எழுத்துத் தேர்வு மற்றும் உடற்தகுதித் தேர்வு ஆகியவற்றில் தோல்விக்கான காரணங்களை வழங்க கோருவது அல்லது எழுத்துத் தேர்வு மற்றும் உடற்தகுதித் தேர்வு ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வு செய்யப்படாதது குறித்த

காரணங்களை வழங்க கோருவது அல்லது **OMR** விடைத்தாள்களை மறுமதிப்பீடு செய்வதற்கான கோரிக்கைகள் ஏற்று கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பதாரர்கள் தங்கள் மதிப்பெண்கள் அல்லது விடைத்தாள் நகலை முழு தேர்வு செயல்முறை முடிவதற்கு முன் வழங்க கோருதல் வாரியத்தால் ஏற்று கொள்ளப்படமாட்டாது.

**26. எழுத்துத் தேர்வு மையங்கள்:**

விண்ணப்பதாரர்கள் தேர்வு கூட சீட்டை இவ்வாரியத்தின் அதிகாரபூர்வ இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யும் போது தேர்வு மையம் குறித்த விவரங்களை தெரிந்து கொள்ளலாம் மற்றும் எழுத்துத் தேர்வு மையங்களை கூட்டவோ, குறைக்கவோ அல்லது விண்ணப்பதாரரை நிர்வாக காரணத்தினால் பிற மையத்திற்கு மாற்றவோ இவ்வாரியத்திற்கு அதிகாரம் உண்டு. **(பிற்சேர்க்கை - X).**

**27. தடைசெய்யப்பட்ட பொருட்கள்:**

i. விண்ணப்பதாரர்கள் கைக்கணினி (Calculator), கைப்பேசி (Cell Phone), செய்தி ஏற்பி (Pager), மின்னணு சாதனங்கள் (Electronic Equipments), அல்லது நிரல்படுத்தக்கூடிய சாதனங்கள் (Programmable Devices) அல்லது செருகு பதிவிகள் (Pen Drives), கணினி செயல்பாட்டை உள்ளடக்கிய கைக் கடிகாரங்கள் (Smart Watches), உள்ளக நினைவகம் (Inbuilt Memory) கொண்ட கைக் கடிகாரங்கள் (Watches) மற்றும் மோதிரங்கள் (Rings) அல்லது புகைப்பட கருவி (Camera) அல்லது ஊடலை சாதனங்கள் (Bluetooth Devices) அல்லது தகவல் தொடர்பு சில்லுகள் (Communication Chips) அல்லது வேறு ஏதேனும் உபகரணங்கள் அல்லது தொடர்புடைய உபரி பாகங்கள் அல்லது உபயோகிக்கும் நிலை அல்லது அனைத்த நிலையில் உள்ள தகவல் தொடர்பு சாதனங்கள் போன்றவற்றை தேர்வு கூடம் / அறைக்குள் கொண்டு வர அனுமதியில்லை. விண்ணப்பதாரர்கள் கணிதம் மற்றும் வரைதல் கருவிகள், பதிவு அட்டவணைகள், வரைபடங்களின் ஸ்டென்சில்கள், அளவுகோல்கள், புத்தகங்கள், குறிப்புகள், உதிரி தாள்கள், உரைநடைகள், தனி தாள்கள், செய்தித்தாள், குடை, கைப்பை, சாவி கொத்து போன்ற மின்னணு அல்லாத சாதனங்களை தேர்வு கூடம் / அறைக்குள் கொண்டு வர அனுமதியில்லை.

ii. விண்ணப்பத்தாரர்களிடம் இதுபோன்ற பொருட்கள் அல்லது கருவிகள் இருப்பது கண்டறியப்பட்டால், அவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் அவர்களது விடைத்தாள் செல்லாததாக்கப்படும் / எதிர்காலத்தில் தேர்வு எழுத தடை விதிக்கப்படும் / விண்ணப்பம் நிராகரிப்பு செய்யப்படும். அவசியம் ஏற்பட்டால் அவர்கள் அந்த இடத்திலேயே முழுமையான உடல் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

iii. கைபேசி உள்ளிட்ட தடை செய்யப்பட்ட பொருட்களை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய இயலாத காரணத்தால் விண்ணப்பதாரர்கள் தங்கள் நலன் கருதி எதையும் தேர்வு நடைபெறும் இடத்திற்கு கொண்டு வர வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

iv. விண்ணப்பதாரர்கள் ஆள்மாறாட்டம் செய்வதைத் தடுக்க, எழுத்து தேர்வு மற்றும் உடல் தகுதி தேர்வு உயிரியளவியல் (BIOMETRIC) சோதனைக்குத் விண்ணப்பதாரர்கள் உட்படுத்தப்படுவார்கள்.

28. **எச்சரிக்கை**:

i). தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் அனைத்து தேர்வுகளும் முற்றிலும் தகுதி அடிப்படையிலானவை. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், நியாயமற்ற வழிகளில் வேலை வாய்ப்பை பெற்று தருவதாக பொய்யான வாக்குறுதிகளை அளித்து ஏமாற்றும் தரகர்கள், **பயிற்சி நிறுவனங்கள்** மற்றும் முகவர்களிடம் ஏமாற வேண்டாம் என விண்ணப்பதாரர்களை எச்சரிக்கிறது. இத்தகைய நேர்மையற்ற நபர்களுடன் எந்த விதமான பரிவர்த்தனைகளில் ஈடுபடும் எந்தவொரு விண்ணப்பதாரருக்கு ஏற்படும் இழப்புகளுக்கு தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் பொறுப்பாகாது.

ii). இணையவழி விண்ணப்பத்தில் அவர்களின் உரிமைகோரல்களுக்கு விண்ணப்பதாரர்கள் மட்டுமே பொறுப்பாவர். தேர்வுக்கு இணையவழியாக விண்ணப்பிக்கும் போது ஏற்படும் தவறுகளுக்கு இணையகம் (Internet Cafe) / வலை உலா மையங்கள் (Browsing Centers) / பொதுவான சேவை மையங்கள் (Common service centers) போன்ற சேவை வழங்குபவர்களை குறை கூற முடியாது. விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட இணையவழி விண்ணப்பத்தை இறுதியாகச் சமர்ப்பிக்கும் முன் சரிபார்க்க அறிவுறுத்தப்படுகிறார்கள். தவறும் பட்சத்தில் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் பொறுப்பாகாது.

29. **குற்ற நடவடிக்கை**:

பின்வரும் காரணங்களுக்காக விண்ணப்பதாரர்கள் மீது குற்ற நடவடிக்கை எடுக்கப்படும்:

அ). விண்ணப்பதாரர்கள் தேர்வு கூடத்தில் ஒழுக்கமின்மை மற்றும் தவறான நடத்தை புரிதல் மற்றும் தேர்வு கூடத்தில் மட்டுமின்றி, தேர்வு மைய வளாகத்தின் உள்ளேயும் கடுமையான ஒழுக்கத்தை கடைபிடிக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் புகைபிடித்தல் / போதையில் இருத்தல், அல்லது ஏதாவது ஒரு தகராறில் ஈடுபடுதல், அல்லது தேர்வுக்கு முன்/ தேர்வின் போது / தேர்வுக்கு பின் தேர்வு கூட கண்காணிப்பாளரிடம் அல்லது ஆய்வு அதிகாரிகளிடம் அல்லது வேறு எந்த விண்ணப்பதாரர்களிடத்தில் தவறாக நடந்து கொண்டது கண்டறியப்பட்டால், OMR விடைத்தாள் செல்லாததாக்கப்படுவதோடு, வாரியம் பொருத்தமானதாகக் கருதும் எந்தக் காலத்திற்கும் தேர்வெழுத தடை விதித்தல் மற்றும் தகுந்த குற்ற நடவடிக்கைகளும் எடுக்கப்படும்

ஆ). ஆள்மாறாட்டம் செய்தல் மற்றும் தேர்வு கூடத்தில் அல்லது வெளியில் நியாயமற்ற வழிகளில் ஈடுபடுவது உட்பட எந்தவொரு முறைகேடுகளிலும் ஈடுபட்டால் குற்ற நடவடிக்கைக்கு ஆட்படுத்தபடுவதோடு, வாரியத்தால் பொருத்தமானதாகக் கருதப்படும் எந்தவொரு காலத்திற்கும் தேர்வெழுத தடை விதிக்க வழிவகை மேற்கொள்ளப்படும்.

இ). கீழ்கண்ட செயல்களில் ஈடுபடும் விண்ணப்பதாரர்கள் மீது வாரியத்தால் பொருத்தமானதாகக் கருதப்படும் எந்தவொரு காலத்திற்கும் தடை விதிக்கப்படுவதோடு அவர்களின் **OMR** விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.

i. தேர்வுக் கூடத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஏதேனும் முறையற்ற செயல்கள் அல்லது முறைகேடுகளில் ஈடுபடும் விண்ணப்பதாரர்.
ii. தேர்வு கூடத்தில் வேறொரு விண்ணப்பதாரரிடம் ஆலோசனை செய்தல் / பார்த்து எழுதுதல்.
iii. மற்றவரை தனது OMR விடைத்தாள் / கேள்வி புத்தகத்தில் இருந்து பார்த்து எழுத அனுமதித்தல்.
iv. அச்சிடப்பட்ட / தட்டச்சு செய்யப்பட்ட / கையால் எழுதப்பட்ட புத்தகங்கள் அல்லது குறிப்புகளில் இருந்து பார்த்து எழுதுதல்.
v. தேர்வுகூடத்தில் கேள்விகளுக்கு பதிலளிக்க எந்தவொரு அதிகாரி / தேர்வு கூட கண்காணிப்பாளரின் உதவியை நாடுதல்.
vi. தேர்வாளரை அணுகுவது அல்லது அணுக முயற்சிப்பது அல்லது விண்ணப்பதாரர்களின் சார்பாக ஒரு தேர்வாளரை அணுகுவதற்கு மற்றவர்களை நாடுவது.
vii. மின்னணு சாதனங்களாகிய கைபேசி (Cellular Phone), உள்ளக நினைவகம் (Inbuilt Memory) கொண்ட கை கடிகாரங்கள் (Watches) மற்றும் மோதிரங்கள் (Rings), ஊடலை சாதனங்கள் (Bluetooth Devices), தகவல் தொடர்பு சில்லுகள் (Communication Chips), பிற மின்னணு சாதனங்கள் (Other Electronic Devices) மற்றும் புத்தகங்கள், குறிப்புகள், கைப்பைகள், பிற அனுமதிக்கப்படாத பொருட்கள் போன்ற சாதனங்களை வைத்திருத்தல்.
viii. தேர்வுகூடத்திலிருந்து, பயன்படுத்திய / பயன்படுத்தப்படாத OMR விடைத்தாளின் முழு அல்லது பகுதியை தேர்வுகூட கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்காமல் எடுத்துச் செல்லுதல்.
ix. OMR விடைத்தாளில் அச்சிடப்பட்ட பட்டைக்குறியை (Barcode) சேதப்படுத்துதல்.

ஈ). விண்ணப்பதாரர்களுக்கான வினாக் கையேட்டில் அச்சிடப்பட்ட அறிவுறுத்தல்கள் அல்லது OMR விடைத்தாளில் / தேர்வுகூட சீட்டு ஆகியவற்றில் உள்ள வாரியத்தின் அறிவுறுத்தல்களில் உள்ள ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வழிமுறைகளை மீறினால், விண்ணப்பதாரர் நிரந்தரமாகவோ அல்லது வாரியம் பொருத்தமானதாகக் கருதும் எந்தக் காலத்திற்கும் தேர்வெழுத தடை செய்யப்படுவர் / உரிய செயல்முறைக்குப் பிறகு விண்ணப்பதாரர் நிலை நிராகரிக்கப்படும் / விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.

**30. பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய சான்றிதழ்கள் / ஆவணங்களின் பட்டியல்**:

இணையவழி விண்ணப்பம் சமர்ப்பிக்கும் பொழுது, விண்ணப்பதாரருடைய தகுதிகள் மற்றும் சலுகைகளுக்கு தேவையான கீழ்கண்ட தங்களுக்குரிய சான்றிதழ்களை மட்டும் பதிவேற்றம் செய்யவும்.

| | |
|---|---|
| i. | விண்ணப்பதாரர் தனது பெயரை பத்தாம் வகுப்பிற்கு பின்னர் மாற்றம் செய்திருப்பின் அதன் விவரத்தினை அரசிதழில் (Government Gazette) வெளியிட்டிருந்தால், அரசிதழின் முதல் பக்கம் மற்றும் பெயர் மாற்றம் செய்த விவரம் வெளியிடப்பட்ட பக்கங்களின் நகல். |
| ii. | பிறந்த தேதிக்கான சான்று (பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்). |
| iii. | கல்வித் தகுதிக்கான சான்று - 10-ம் வகுப்பில் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றதற்கான சான்றிதழ். விண்ணப்பதாரர்கள் பல முயற்சிகளில் 10-ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்தால், அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றதற்கான மதிப்பெண் சான்றிதழ்களையும் தவறாமல் பதிவேற்றம் செய்திடல் வேண்டும். இவ்விதம் பல முயற்சிகளில் 10-ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்து, அதனடிப்படையில் இறுதியாக தேர்ச்சி பெற்ற பாடத்தின் மதிப்பெண் சான்றிதழை மட்டுமே பதிவேற்றம் செய்தால், அம்மதிப்பெண் சான்றிதழ் உரிய கல்வித் தகுதிக்குரிய சான்றிதழாக பரிசீலினைக்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. |
| iv. | தமிழ்நாடு அரசின் தகுதி வாய்ந்த அதிகாரிகளால் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ். |
| v. | வருவாய் கோட்ட அலுவலர் அல்லது உதவி ஆட்சியர் அல்லது சார் ஆட்சியரிடமிருந்து பெறப்பட்ட ஆதரவற்ற விதவைக்கான சான்றிதழ். |
| vi. | முன்னாள் இராணுவத்தினர் மற்றும் முன்னாள் மத்திய ஆயுத காவல் படை வீரர்கள் பெயர் மற்றும் விடுவிக்கப்பட்ட தேதி குறிப்பிடப்பட்ட விடுவிப்பு சான்றிதழ் / இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசித் தேதிக்குப் பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வு பெறவுள்ள இராணுவ வீரர்களின் சுய உறுதிமொழிச் சான்றிதழ் மற்றும் தங்களது படை பிரிவு அலுவலரிடத்தில் (Commanding Officer) பெறப்பட்ட விடுவிக்கப்படும் தேதி (Discharging Date) குறிப்பிட்ட சான்றிதழ். |
| vii. | தேசிய மாணவர் படை (NCC) சான்றிதழ். |
| viii. | நாட்டு நலப் பணித்திட்டம் (NSS) சான்றிதழ். |
| ix. | சிறப்பு மதிப்பெண்களுக்குரிய விளையாட்டுப் போட்டிகளுக்கான சான்றிதழ். |
| x. | விளையாட்டு ஒதுக்கீட்டிற்கான சான்றிதழ் (படிவம் I / படிவம் II / படிவம் III). |
| xi. | தகுதி வாய்ந்த அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட சார்ந்துள்ள வாரிசுக்கான சான்றிதழ். |
| xii. | மேதகு இந்தியக் குடியரசு தலைவரிடமிருந்து பெற்ற சாரணர் / சாரணியர் (Scout / Guide) சான்றிதழ். |
| xiii. | தமிழ் பயிற்று மொழியில் 1-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை முழுவதுமாக தமிழ் மொழியில் பயின்றதற்கான சான்றிதழ். |

| | |
|---|---|
| xiv. | மத்திய மாநில அரசு மற்றும் பொது நிறுவனங்களில் பணியாற்றினால் அதற்கான பரிந்துரைக்கப்பட்ட தடையில்லா சான்றிதழ். |
| xv. | தமிழ்நாடு திருநங்கைகள் நலவாரியம் / மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்ட அடையாள அட்டை. |
| xvi. | வெள்ளை நிற பின்னணியுடன் கூடிய சமீபத்திய மார்பளவு வண்ண (PASSPORT SIZE) புகைப்படம் மட்டுமே பதிவேற்றம் செய்ய வேண்டும். புகைப்படத்தின் அளவு 3.5 செ.மீ அகலம் மற்றும் 4.5 செ.மீ உயரம், இருக்கவேண்டும். |
| xvii. | விண்ணப்பதாரரின் இடது கை கட்டை விரல் ரேகை பதிவின் பிம்பம் பதிவேற்றம் செய்ய வேண்டும். பதிவின் அளவு 4.0 செ.மீ அகலம் மற்றும் 2.0 செ.மீ உயரம், இருக்கவேண்டும். |
| xviii. | விண்ணப்பதாரரின் கையொப்ப பிம்பம் பதிவேற்றம் செய்ய வேண்டும். பிம்பத்தின் அளவு 6.0 செ.மீ அகலம் மற்றும் 2.0 செ.மீ உயரம், இருக்கவேண்டும். |

**31. சான்றிதழ்களின் மாதிரி படிவம் / பிற்சேர்க்கை விவரங்கள்:**

| | |
|---|---|
| (i) | வகுப்புவாரி சாதி பட்டியல் **பிற்சேர்க்கை** - I. |
| (ii) | சார்ந்துள்ள வாரிசுக்கான சான்றிதழின் மாதிரி படிவம் மற்றும் பெற்றோர் அளிக்கும் சுய உறுதிமொழி பத்திரம் **பிற்சேர்க்கை** - II & II (A). |
| (iii) | 1-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயின்றதற்கான சான்றிதழின் மாதிரி படிவம் **பிற்சேர்க்கை** - III. |
| (iv) | இத்தேர்விற்கு விண்ணப்பம் பெறப்படும் கடைசி தேதிக்குப் பின்னர் ஓராண்டு காலத்திற்குள் ஓய்வு பெறவுள்ள இராணுவப் படை வீரர்கள் தங்களது படை பிரிவு அலுவலரிடத்தில் பெற வேண்டிய சான்றிதழின் மாதிரி படிவம் **பிற்சேர்க்கை** - IV. |
| (v) | ஆதரவற்ற விதவை சான்றிதழின் மாதிரி படிவம் **பிற்சேர்க்கை** - V. |
| (vi) | தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியம் / மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறவேண்டிய மாதிரி அடையாள அட்டை **பிற்சேர்க்கை** - VI. |
| (vii) | மத்திய / மாநில அரசு மற்றும் பொது நிறுவனங்களில் பணியாற்றுபவர்களுக்கான தடையில்லா சான்றிதழின் மாதிரி படிவம் **பிற்சேர்க்கை** - VII. |
| (viii) | அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு சங்கங்களின் விவரம் - **பிற்சேர்க்கை** - VIII. |
| (ix) | மருத்துவப்பரிசோதனை சான்றிதழின் மாதிரி படிவம் **பிற்சேர்க்கை** - IX. |
| (x) | எழுத்துத்தேர்வு மையங்களின் விவரம் **பிற்சேர்க்கை** - X. |
| (xi) | மெச்சத்தக்க விளையாட்டு வீரர்களுக்கான 3% ஒதுக்கீடு அரசாணைகள் - **பிற்சேர்க்கை** - XI |
| (xii) | தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் சட்டம். அரசாணை - **பிற்சேர்க்கை** - XI A |

| | |
|---|---|
| (xiii) | காவல்துறைக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பணி அமர்வு செய்தல் அரசாணை - **பிற்சேர்க்கை** - XI B |
| (xiv) | மெச்சத்தக்க விளையாட்டு வீரர்களுக்கான தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணையவழி விண்ணப்ப பக்கத்தின் ஸ்க்ரீன்ஷாட் **பிற்சேர்க்கை** - XII |

**32. விண்ணப்பதாரர்களுக்கான பொது அறிவுரைகள்** :

விண்ணப்பதாரர்கள் இணைய வழி விண்ணப்பத்தில் அளித்துள்ள தகவல்கள் அனைத்தும் தங்கள் அறிவிற்கு மற்றும் நம்பிக்கைக்கு உண்மையானதாகவும், சரியானதாகவும் மற்றும் முழுமையானதாகவும் இருக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் அளித்துள்ள தகவல்கள் தவறானது, போலியானது, முழுமையற்றது அல்லது தகுதியற்றது என கண்டறியப்பட்டால் விண்ணப்பதாரர் எந்த நிலையில் கலந்து கொண்டிருப்பினும் விண்ணப்பதாரர் நிலை உறுதியாக நிராகரிக்கப்படும். மேலும் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின் முடிவே இறுதியானது.

உறுப்பினர் செயலாளர்,
தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்.
சென்னை-08.

**பிற்சேர்க்கை - I**

வகுப்புவாரி சாதி பட்டியல்

**Part - A**

| **பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல்** | |
|---|---|
| 1 | அகமுடையார் (தொழுவ அல்லது துளுவவெள்ளாளர் உட்பட) |
| 2 | அகரம் வெள்ளாஞ்செட்டியார் |
| 3 | ஆழ்வார், அழவர் மற்றும் அளவர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்) |
| 4 | சேர்வை (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் நீங்கலாக) |
| 5 | அரயர், (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்) |
| 6 | அர்ச்சகர வேளாளர் |
| 7 | ஆர்யவதி (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்) |
| 8 | ஆயிர வைசியர் |
| 9 | படகர் |
| 10 | பில்லவா |
| 11 | பொண்டில் |
| 12 | போயர்கள் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, நீலகிரி, சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் நீங்கலாக), பெத்தபோயர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை நீங்கலாக), ஒட்டர்கள் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி, திண்டுக்கல் மாவட்டங்கள் நீங்கலாக), கல் ஒட்டர்கள் (காஞ்சிபுரம், திருவள்ளூர், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், மதுரை, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, நாமக்கல், சேலம் மாவட்டங்கள் நீங்கலாக), நெல்லூர்பேட்டை ஒட்டர்கள் (வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்கள் நீங்கலாக), சூரமாரி ஒட்டர்கள் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டம் நீங்கலாக) |
| 13 | சக்காலா (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக) |
| 14 | சவலக்காரர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்) |
| 15 | செட்டு அல்லது செட்டி (கோட்டார் செட்டி, ஏலூர் செட்டி, பாத்திரச் செட்டி, வேலூர் செட்டி, புதுக்கடை செட்டி உட்பட) (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்) |
| 16 | சௌத்திரி |
| 17 | கல்வி நிலையங்களில் இருக்கைகள் மற்றும் அரசுப்பணிகளின் இருக்கைக்களுக்கும் இட ஒதுக்கீடு பெறும் நோக்கத்திற்காக தலைமுறையைப் பொருட்படுத்தாமல் ஆதிதிராவிடர் வகுப்பினர்களிலிலிருந்து கிறித்துவராக மாறியவர்கள். |
| 18 | தென்னிந்திய திருச்சபை (முன்னாள் தெ.இ.கி.ஒ) (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்) |
| 19 | தொங்க தாசரிகள் (காஞ்சீபுரம், திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, சென்னை, நாமக்கல் மற்றும் சேலம் மாவட்டங்கள் நீங்கலாக) |
| 20 | தேவாங்கர், சேடர் |
| 21 | தொம்மார்கள் (புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் நீங்கலாக), தோமர்கள் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் நீங்கலாக) |
| 22 | ஏனாதி |

| | |
|---|---|
| 23 | எழவதி (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்) |
| 24 | எழுத்தச்சர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்) |
| 25 | எழுவா (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்) |
| 26 | கங்கவார் |
| 27 | கவரா, கவரை மற்றும் வடுகர் (வடுவர்) (கம்மா, காப்பு பலிஜா மற்றும் ரெட்டி இல்லாத பிற) |
| 28 | கௌண்டர் |
| 29 | கௌடா (கம்மாளர், கலாலி மற்றும் அனுப்பக் கவுண்டர்) |
| 30 | ஹெக்டே |
| 31 | இடிகா |
| 32 | இல்லத்துப்பிள்ளைமார், இள்ளுவர் (ஈழவர்), எழுவர், இல்லத்தார் |
| 33 | ஜெட்டி |
| 34 | ஜோகிகள் (காஞ்சீபுரம், திருவள்ளூர், மதுரை, தேனி, திண்டுக்கல், கடலூர், விழுப்புரம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் நீங்கலாக) |
| 35 | கப்போரா |
| 36 | கைக்கோளர், செங்குந்தர் |
| 37 | காலாடி (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் நீங்கலாக) |
| 38 | களரி குருப், களர் பணிக்கர் உட்பட (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்) |
| 39 | கலிங்கி |
| 40 | கள்ளர், ஈசநாட்டுக் கள்ளர், கந்தர்வ கோட்டை கள்ளர்கள் உட்பட (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் நீங்கலாக) கூத்தப்பால் கள்ளர்கள் (புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மாவட்டங்கள் நீங்கலாக), பிரமலைக் கள்ளர்கள் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்கள் நீங்கலாக), பெரிய சூரியர் கள்ளர்கள் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் நீங்கலாக) |
| 41 | கள்ளர் குலத் தொண்டைமான் |
| 42 | கால்வேலிக் கௌண்டர் |
| 43 | கம்பர் |
| 44 | கம்மாளர் அல்லது விஸ்வகர்மா (விஸ்வகர்மாலா, தட்டார், பொற்கொல்லர், கன்னார், கருமார், கொல்லர், தச்சர், கல்தச்சர், கம்சாலா மற்றும் விஸ்வபிராமணர் உட்பட) |
| 45 | கணி, கணிசு, கனியர், பணிக்கர் |
| 46 | கனியால வேளாளர் |
| 47 | கன்னட சைனீகர், கன்னடியார் (மாநிலம் முழுவதும்) மற்றும் தசபலான்ஜிகா (கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களில்) |
| 48 | கன்னடிய நாயுடு |
| 49 | கற்பூர செட்டியார் |
| 50 | கருணீகர் (சீர் கருனீகர், ஸ்ரீ கருணீகர், சரடு கருணீகர், கைகட்டிக் கருணீகர், மாத்து வழ கணக்கர், சோழிக் கணக்கர் மற்றும் சுண்ணாம்பு கருணீகர்) |
| 51 | காசுக்கார செட்டியார் |
| 52 | கடேசர், பட்டம்கட்டி |
| 53 | கவுத்தியர் |
| 54 | கேரளமுதலி |

| | |
|---|---|
| 55 | கார்வி |
| 56 | கத்ரி |
| 57 | கொங்கு வைணவர் |
| 58 | கொங்கு வேளாளர்கள் (வெள்ளாளக் கௌண்டர், நாட்டுக் கௌண்டர், நரம்புக் கட்டிக் கௌண்டர், திருமுடி வேளாளர், தொண்டு வேளாளர், பாலக் கௌண்டர், பூசாரிக் கௌண்டர், அனுப்ப வேளாளக் கௌண்டர், குரும்பக் கௌண்டர், படைத்தலைக் கௌண்டர், செந்தலைக் கௌண்டர், பாவலன்கட்டி வெள்ளாளக் கௌண்டர், பால வெள்ளாளக் கௌண்டர், சங்கு வெள்ளாளக் கௌண்டர் மற்றும் ரத்தினகிரிக் கௌண்டர் உட்பட) |
| 59 | கோப்பல வேலம்மா |
| 60 | கோட்டேயர் |
| 61 | கிருஷன்வாகா (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்) |
| 62 | குடிகார வேளாளர் |
| 63 | குடும்பி (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்) |
| 64 | குக வேளாளர் |
| 65 | குஞ்சிடிகர் |
| 66 | இலத்தீன் கத்தோலிக்கர்கள் (கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள இலத்தீன் கத்தோலிக்க வண்ணாரைத் தவிர) |
| 67 | இலத்தீன் கத்தோலிக்கர்கள் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்) |
| 68 | லம்பாடி |
| 69 | லிங்காயத் (ஜங்கமா) |
| 70 | மராட்டிய (பிராமணரல்லாதோர்) நாம்தேவ் மராட்டியர் உட்பட |
| 71 | மலயர் |
| 72 | மாலி |
| 73 | மானியகார் |
| 74 | மறவர்கள் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் நீங்கலாக) கருமறவர்கள், அப்பனாடு கொண்டையம் கோட்டை மறவர் உட்பட (சிவகங்கை, விருதுநகர், தேனி, மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள் நீங்கலாக) மற்றும் செம்பனாடு மறவர்கள் (சிவகங்கை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் நீங்கலாக) |
| 75 | மூன்று மண்டை எண்பத்துநாலு (84) ஊர் சோழிய வெள்ளாளர்கள் |
| 76 | மூப்பன் |
| 77 | முத்துராசா, முத்துராச்சா, முத்திரியர், முத்தரையர் |
| 78 | நாடார், சாணார் மற்றும் கிராமணி (கிறித்துவ நாடார், கிறித்துவ சாணார் மற்றும் கிறித்துவ கிராமணி உட்பட) |
| 79 | நகரம் |
| 80 | நாயக்கர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்) |
| 81 | நன்குடி வேளாளர் |
| 82 | நாஞ்சில் முதலி (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்) |
| 83 | ஓடர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்) |
| 84 | ஓதியா |
| 85 | ஊற்று வளநாட்டு வேளாளர் |
| 86 | ஓ.பி.எஸ்.வேளாளர் |

| | |
|---|---|
| 87 | உவச்சர் |
| 88 | பய்யூர் கோட்ட வேளாளர் |
| 89 | பாமுலு |
| 90 | பாணர் (இந்த இனம் ஆதிதிராவிட வகுப்பினர்களாக இருக்கும் (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டம் நீங்கலாக) |
| 91 | பாண்டிய வேளாளர் |
| 92 | கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கதிகாரர் |
| 93 | [பன்னிரண்டாம் செட்டியார்]] அல்லது உத்தமச் செட்டியார் |
| 94 | பார்க்கவகுலம் (சுரிதிமார், நத்தமார், மலைமார், மூப்பனார், நைனார் உட்பட) |
| 95 | பெருக்கி (பெரிகே, பலிஜா உட்பட) |
| 96 | பெரும்கொள்ளர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்) |
| 97 | பொடிகார வேளாளர் |
| 98 | பூலுவ கவுண்டர் |
| 99 | பொராயா |
| 100 | புலவர்(கோயம்புத்தூர், ஈரோடு மாவட்டங்களில்) |
| 101 | புள்ளுவர் அல்லது பூலூவர் |
| 102 | புசலா |
| 103 | ரெட்டி (கஞ்சம்) |
| 104 | சாதுச் செட்டி (தெலுங்குச் செட்டி, இருபத்து நான்கு மனைத் தெலுங்குச் செட்டி உட்பட) |
| 105 | சக்கரவார் அல்லது கவதி (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்) |
| 106 | சாலிவாகனா |
| 107 | சாலியர், பத்மசாலியர், பட்டு சாலியர், பட்டாரியர் மற்றும் அடவியர் |
| 108 | சவலக்காரர் |
| 109 | சேனைத்தலைவர், சேனைக்குடியர், இலை வாணியர் |
| 109 -A | திய்யா (Thiyya) **#** |
| 110 | சார்குல வெள்ளாளர் |
| 111 | சௌராட்டிரா (பட்டுநூல்காரர்) |
| 112 | சோழிய வெள்ளாளர் (சோழ வெள்ளாளர், வெற்றிலைக்காரர், கொடிக்கால்காரர் மற்றும் கீரைக்காரர்) |
| 113 | ஸ்ரீசயர் |
| 114 | சுந்தரம் செட்டி |
| 115 | தொகட்டா வீரசத்திரியர் |
| 116 | தொல் கொல்லர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்) |
| 117 | துளவ நாய்க்கர் மற்றும் வெத்தலக்கார நாய்க்கர் |
| 118 | தொரையர் |
| 119 | உக்கிரகுல சத்திரிய நாயக்கர் |
| 120 | உப்பாரா, உப்பிலியா மற்றும் சகாரா |
| 121 | ஊராளிக் கவுண்டர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் நீங்கலாக) மற்றும் ஒருடைய கவுண்டர் அல்லது ஊருடைய கவுண்டர் (மதுரை, தேனி, திண்டுக்கல், கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள் நீங்கலாக) |
| 122 | உரிக்கார நாயக்கர் |
| 123 | வீரக்கொடி வெள்ளாள |
| 124 | வல்லம்பர் |

| | |
|---|---|
| 125 | வல்லநாட்டு செட்டியார் |
| 126 | வால்மீகி |
| 127 | வாணியர், வாணியச் செட்டியார் (கண்டல், கனிகா, தெலிகுல செக்கலார் உட்பட) |
| 128 | வேடுவர் மற்றும் வேடர் (இச்சமூகத்தினர் ஆதிதிராவிடராக இருக்கும் (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டம் நீங்கலாக) |
| 129 | வீர சைவர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்) |
| 130 | வேளர் |
| 131 | வெள்ளாஞ்செட்டியார் |
| 132 | வெலுதொடத்து நாயர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்) |
| 133 | வொக்கலிகர் (வக்கலிகர், ஒக்காலிகர், கப்பிலியர், ஒக்கலிக கௌடா, ஒக்காலியா கௌடா, ஒக்காலிய கவுடர், ஒக்காலிய கவுடா உட்பட) |
| 134 | வயநாடு செட்டி (நீலகிரி மாவட்டம்) |
| 135 | யாதவா (இடையர், வேடுக ஆயர் அல்லது வடுக இடையர் அல்லது கொல்லா மற்றும் அஸ்தந்திர கொல்லா என அழைக்கப்படுகிற தெலுங்கு மொழி பேசும் இடையர் உட்பட) |
| 136 | யவன |
| 137 | ஏருகுலா |
| 138 | மீனவர், பர்வதராஜகுலம், பட்டணவர், செம்படவர், முக்குவார் அல்லது மூகையர் மற்றும் பர்வரிலிருந்து கிறித்துவ மதத்திற்கு மதம் மாறியவர்கள் நீங்கலாக எந்த ஒரு இந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பு அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு அல்லது சீர்மரபினர்கலிலிருந்து கிறித்துவ மதத்திற்கு மதம் மாறியவர்கள். |
| 139 | 10 வயதுக்கு முன்பு பெற்றோர்களை இழந்தவர்கள் மற்றும் ஆதரவற்றவர்கள். சட்டப்படியோ அல்லது வழக்கமாகவோ எவர் ஒருவரும் அவர்கள் மீது அக்கறை கொள்ளாதவர்கள் மற்றும் அரசால் ஏற்பளிக்கப்பட்ட பள்ளிகள் அல்லது அனாதைகள் மற்றும் ஆதரவற்றவர்கள். |
| | **# இடையில் சேர்க்கப்பட்ட Tamil Nadu Gazette No.33, Dated: 12.08.2020** |

| Part - B | |
|---|---|
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல் (இஸ்லாமியர்) | |
| 1 | அன்சார் |
| 2 | தக்கானி முஸ்லீம் |
| 3 | துதிகுலா |
| 4 | லப்பைகள் இராவுத்தர் மற்றும் மரைக்காயர் உட்பட (அவர்கள் பேசும் மொழி தமிழ் அல்லது உருது ஆக இருப்பினும்) |
| 5 | மாப்பிள்ளா |
| 6 | ஷேக் |
| 7 | சையத் |

| Part - C | |
|---|---|
| மிகவும் பிற்பட்ட வகுப்பினர் | |
| 1 | அம்பலக்காரர் |
| 2 | ஆண்டிப்பண்டாரம் |
| 3 | அரயர் (கன்னியாகுமரி மாவட்டம்) |
| 4 | பெஸ்தா, சீவியர் |
| 5 | பட்ராஜீ (சத்திரிய ராஜீக்கள் நீங்கலாக) |
| 6 | போயர், ஒட்டர் |
| 7 | தாசரி |
| 8 | தொம்மரா |
| 9 | எரவள்ளர் (இவ்வினத்தவர்கள் பட்டியலில் பழங்குடியினராக உள்ள கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டம் நீங்கலாக) |
| 10 | இசை வேளாளர் |
| 11 | ஜம்புவானோடை |
| 12 | ஜங்கம் |
| 13 | ஜோகி |
| 14 | கொங்குச் செட்டியார் (கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் மட்டும்) |
| 15 | கொரச்சா |
| 16 | குலாலா (குயவர், கும்பரர் உள்ளிட்ட) |
| 17 | குன்னுவர் மன்னாடி |
| 18 | குறும்பா, குறும்பகவுண்டர் |
| 19 | குறு உறனி செட்டி |
| 20 | இலத்தீன் கத்தோலிக்க கிருஸ்துவ வண்ணார் (கன்னியாகுமரி மாவட்டத்தில்) |
| 21 | மருத்துவர், நாவிதர், மங்கலா, வேலக்கட்டலவா, வேலக்கட்டல நாயர் மற்றும் புரோனோபகாரி |
| 22 | மோண்ட் கொல்லா |
| 23 | மவுண்டாடன் செட்டி |
| 24 | மகேந்திரா, மேதரா |
| 25 | முட்டலகம்பட்டி |
| 26 | நோக்கர் |
| 27 | பாணிசைவன் / பாணிசிவன |
| 28 | வன்னிய குலச் சத்திரியர் (வன்னியர், வன்னியா, வன்னியகவுண்டர், கவுண்டர் அல்லது கண்டர், படையாட்சி, பள்ளி மற்றும் அக்னிகுல சத்திரியர் உட்பட) |
| 29 | பரவர்,பரதவர்,பரதர் (இச்சமுதாயத்தினர் பட்டியல் வகுப்பினராக உள்ள கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டம் நீங்கலாக, கிறித்துவ மதத்திற்கு மாறியவர் உட்பட) |
| 30 | பறவர் கிருத்துவ மதத்திற்கு மாறியவர் (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டம் உட்பட) |
| 31 | மீனவர் (பர்வதராஜகுலம், பட்டனவார், செம்படவர் கிறித்துவ மதத்திற்கு மாறியவர் உட்பட) |
| 32 | முக்குவார் அல்லது முகயர் (கிறித்துவ மதத்திற்கு மாறியவர் உட்பட) |
| 33 | புன்னன், வேட்டுவ கௌண்டர் |
| 34 | பண்ணையார் (கன்னியாகுமரி மாவட்டத்தில் கதிகாரர் நீங்கலாக) |
| 35 | சதாத ஸ்ரீ வைஷ்ணவ (சதானி, சட்டாடி மற்றும் சட்டாட வைஷ்ணவ உட்பட) |
| 36 | சோழிய செட்டி |
| 37 | தெலுங்குப் பட்டி செட்டி |

| | |
|---|---|
| 38 | தொட்டிய நாயக்கர் (ராஜகம்பளம், கொல்லாவர், சில்லவர், தொக்களவார் மற்றும் தொழுவ நாயக்கர்) |
| 39 | தொண்டைமான் |
| 40 | தொரையார் (நீலகிரி) |
| 41 | தொரையார் (சமவெளி) |
| 42 | திருநங்கை (அ) அரவாணி |
| 43 | வலையர் (செட்டிநாடு வலையர் உட்பட) |
| 44 | வண்ணார்(சலவைத் தொழிலாளர்), அகசா, மடிவளா, ஏகாலி, ராஜகுல வேலுத்தடார் மற்றும் ராஜாகா உட்பட) (இச்சமூகத்தினர் ஆதிதிராவிட வகுப்பினராக இருக்கும் கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டம் நீங்கலாக) |
| 45 | வேட்டைக்காரர் |
| 46 | வேட்டுவக் கௌண்டர் |
| 47 | யோகீஸ்வரர் |

| Part - **D** | |
|---|---|
| **சீர்மரபினர் பட்டியல்** | |
| 1 | ஆத்தூர் கீழ்நாடு குறவர்கள் (சேலம், நாமக்கல், கடலூர், விழுப்புரம், இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள்) |
| 2 | ஆத்தூர் மேல்நாடு குறவர்கள் (சேலம், நாமக்கல் மாவட்டங்கள்) |
| 3 | அப்பநாடு கொண்டையம் கோட்டை மறவர்கள் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள்) |
| 4 | அம்பலகாரர் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 5 | அம்பலக்காரர் (சூரியனூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்) |
| 6 | போயர்கள் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, நீலகிரி, சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள்) |
| 7 | பட்டுதுர்காஸ் |
| 8 | சி.கே.குறவர்கள் (கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள்) |
| 9 | சக்கலா (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், மதுரை, திண்டுக்கல், நீலகிரி மற்றும் தேனி மாவட்டங்கள்) |
| 10 | சங்கயம்பாடி குறவர்கள் (வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |
| 11 | செட்டிநாடு வலையர்கள் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம் மாவட்டங்கள்) |
| 12 | தொம்பர்கள் (புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள்) |
| 13 | தொப்ப குறவர்கள் (சேலம், நாமக்கல் மாவட்டங்கள்) |
| 14 | தொம்மர்கள் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |
| 15 | தொங்கபோயர் |
| 16 | தொங்கஊர் கொறச்சார்கள் |
| 17 | தேவகுடி தலையாரிகள் |
| 18 | தொப்பை கொறச்சாக்கள் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 19 | தாபி குறவர்கள் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |
| 20 | தொங்கதாசரிகள் (கரூர், பெரம்பலூர், காஞ்சீபுரம், திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |

| | |
|---|---|
| 21 | கொரில்லா தோட்ட போயர் |
| 22 | குடு தாசரிகள் |
| 23 | கந்தர்வ கோட்டை குறவர்கள் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள்) |
| 24 | கந்தர்வ கோட்டை கள்ளர்கள் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 25 | இஞ்சிக் குறவர்கள் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 26 | ஜோகிகள் (காஞ்சீபுரம், திருவள்ளூர், சென்னை, கடலூர், விழுப்புரம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |
| 27 | ஜம்பவனோடை |
| 28 | காலடிகள் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 29 | கல் ஒட்டர்கள் (காஞ்சீபுரம், திருவள்ளூர், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி, கரூர், பெரம்பலூர், சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்) |
| 30 | குறவர்கள் (காஞ்சீபுரம், திருவள்ளூர், இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, சென்னை, மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்கள்) |
| 31 | களிஞ்சி தாபி குறவர்கள் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 32 | கூத்தப்பால் கள்ளர்கள் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 33 | கல குறவர்கள் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 34 | கலவதிலா போயர்கள் |
| 35 | கேப்மாரிகள் (காஞ்சீபுரம், திருவள்ளூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் |
| 36 | மறவர்கள் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள்) |
| 37 | மொந்த குறவர்கள் |
| 38 | மொந்த கொல்லா (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்) |
| 39 | முடலகம்பட்டி (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 40 | நோக்கர்கள் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 41 | நெல்லூர்பேட்டை ஒட்டர்கள் (வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |
| 42 | ஒட்டர்கள் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள்) |
| 43 | பெத்த போயர்கள் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 44 | பொன்னை குறவர்கள் (வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்கள்) |
| 45 | பிரமலைக்கள்ளர்கள் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள்) |
| 46 | பெரிய சூரியூர் கள்ளர்கள் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 47 | படையாட்சி (கடலூர் மாவட்டத்தில் வெள்ளையன் குப்பம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தென்னூர்) |
| 48 | புன்னன் வேட்டுவ கவுண்டர் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை |

| | |
|---|---|
| | மாவட்டங்கள்) |
| 49 | சேர்வை (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 50 | சேலம் மேல்நாடு குறவர்கள் (மதுரை, தேனி, திண்டுக்கல், கோயம்புத்தூர், ஈரோடு, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், சேலம், நாமக்கல், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |
| 51 | சேலம் உப்பு குறவர்கள் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்) |
| 52 | சர்க்கரைத்தாமடை குறவர்கள் (வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |
| 53 | சாரங்கபள்ளி குறவர்கள் |
| 54 | சூரமாரி ஒட்டர்கள் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்) |
| 55 | செம்பநாடு மறவர்கள் (சிவகங்கை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள்) |
| 56 | தல்லி குறவர்கள் (சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள்) |
| 57 | தெலுங்குபட்டி செட்டிகள் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 58 | தொட்டிய நாயக்கர்கள் (சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், காஞ்சீபுரம், திருவள்ளூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருநெல்வேலி, கரூர், பெரம்பலூர், தூத்துக்குடி, சேலம், நாமக்கல், வேலூர், திருவண்ணாமலை, கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்கள்) |
| 59 | தோகமலைக் குறவர்கள் அல்லது கேப்மாரிகள் (திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்) |
| 60 | உப்பு குறவர்கள் அல்லது செட்டி பள்ளி குறவர்கள் (தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி, திண்டுக்கல், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்) |
